www.tamilarangam.net

# தமிழினப் படுகொலைகள் 2002 – பாகம் - 02



வடகிழக்கு மனித உரிமைச் செயலகம்

உள்ளடக்கம் www.tamilarangam.net பக்கம்


01. மன்னார்.பேசாலைப் படுகொலை - 23 டிசெம்பர் 2005 04
02. திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை - 02 ஜனவரி 2006 04-05
03. மானிப்பாய் படுகொலை - 16 ஜனவரி 2006 05-06
04. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தல் - 29 ஜனவரி 2006 06
05. திருகோணமலை இனக்கலவரம் - 12 ஏப்ரல் 2006 07
06. வவுனியா கொம்புவைத்தகுளம் படுகொலை - 13 ஏப்ரல் 2006 08
07. யாழ்.புத்தூர் படுகொலை - 18 ஏப்ரல் 2006 08-09
08. திருகோணமலை மூதூர் படுகொலை - 25 ஏப்ரல் 2006 09
09. உதயன் பணிமனைப் படுகொலை - 02 மே 2005 10
10. நெல்லியடியிப் படுகொலை - 04 மே 2006 10-11
11. யாழ்.மந்துவில் படுகொலை - 06 மே 2006 11-12
12. யாழ். தீவகப் படுகொலை - 13 மே 2006 12-13
13. மட்டு.வடமுனை நெடுங்கல் படுகொலை - 07 யூன் 2006 13-14
14. மன்னார். வங்காலைப் படுகொலை - 08 யூன் 2006 14
15. யாழ். கைதடி மனிதப் புதைகுழி - 06,07,08 யூன் 2006 15
16. பேசாலைத் தேவாலயப் படுகொலை - 17 ஜீன் 2006 15-16
17. மட்டு.மயிலம்பாவெளிப் படுகொலை - 27 யூன் 2006 16
18. மன்னார் முசலிப் படுகொலை - 28 யூன் 2006 17
19. அக்சன்பெயம் (Actionfaim) தன்னார்வ நிறுவனப் படுகொலை 05 ஓகஸ்ட் 2006 17-18
20. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08 ஓகஸ்ட் 2006 18-19
21. கிழக்குப் படுகொலைகள் - ஆகஸ்ட் - டிசம்பர் 2006 19-22
22. அல்லைப்பிட்டிப் படுகொலை - 13 ஆகஸ்ட் 2006 22-23
23. முல்லை. வள்ளிபுனம் செஞ்சோலைப் படுகொலை - 14 ஓகஸ்ட் 2006 23-25
24. அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17 செப்ரெம்பர் 2006 25-26
25. முல்லை . புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை - 16 ஒக்ரோபர் 2006 26-27
26. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை - 02 நவம்பர் 2006 27-28
27. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை - 18 நவெம்பர் 2006 28-29
28. மன்னார் படகுத்துறைப் படுகொலை - 02 ஜனவரி 2007 29-30
29. மன்னார் கல்வியாளர்கள் படுகொலை - 27 பெப்ரவரி 2007 30
30. மட்டு. படுவான்கரைப் படுகொலை - 08,09.மார்ச் 2007 30-31
31. மட்டு. சித்தாண்டிப் படுகொலை - 29 மார்ச் 2007 31
32. மட்டு. செங்கலடிப் படுகொலை - 14 ஏப்ரல் 2007 31-32
33. சிலாவத்துறைப் படுகொலை - 01 செப்ரெம்பர் 2007 32
34. பெரியமடுப் படுகொலை - 25 ஒக்ரோபர் 2007 32-33
35. அம்பாறை றொட்டை செம்மணிக்குளம் படுகொலை - 11 நவெம்பர் 2007 33
36. கிளிநொச்சி தருமபுரம் படுகொலை - 25 நவம்பர் 2007 33-34
37. முல்லை.ஐயன்கன்குளம் படுகொலை - 27 நவம்பர் 2007 34-35
38. புலிகளின் குரல் வானொலி நிலையம் மீதான விமானத் தாக்குதல் 27 நவம்பர் 2007 35-36
39. மன்னார் மடுப் படுகொலை - 29 ஜனவரி 2008 36-38
40. கிளிநொச்சி பூநகரி கிராஞ்சியிப் படுகொலை - 22 பெப்ரவரி 2008 38-39
41. திருமுறிகண்டி - அக்கராயன் வீதியில் கிளைமோர்த்தாக்குதல் - 23 மே 2008 39-40
42. புதூர் நாகதம்பிரான் ஆலயம்சென்று வீடு திரும்பிய அடியவர்கள் மீது கிளைமோர்த் தாக்குதல் - 02 யூன் 2008 40-41
43. புதுக்குடியிருப் படுகொலை - 15 யூன் 2008 42

# அறிமுகம் www.tamilarangam.net

இவ் வெளியீடு வடகிழக்கு மனித உரிமை செயலகத்தால் (NESOHR) வெளியடப்படும் இரண்டாவது தொகுதியாகும். இதன் முதலாவது தொகுதி 2007 இல் வெளியிடப்பட்டது. அந்தத் தொகுதி பாரியளவில் இலங்கை இராணுவத்தால் 1970 தொடக்கம் 2001 வரை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த இரண்டாவது தொகுதியானது 2002 தொடக்கம் 2008 ஆவணி மாதம் வரையிலான படுகொலைகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

முதலாம் தொகுதியில் வெளியிடப்பட்ட விடயங்களோ அல்லது இரண்டாம் தொகுதியில் வெளியிடப்பட்ட விடயங்களோ முழுமையான தகவல்களை உள்ளடக்கியதாக இல்லை. இரண்டாம் தொகுதியிலும் நிசோரால் (NESOHR) சேகரிக்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டதாக இருக்கின்றன. இது போர்நிறுத்தத்திற்கு முன்னதான காலப்பகுதியில் ஏற்பட்ட வன்முறைக்கு பலியானவர்கள் பற்றிய விபரங்களைக் கூறுகின்றது.


இந்தத் தொகுதியில் உள்ளடக்கப்பட்ட முதல் சிலஆண்டுகள் அதாவது 2006ஆம் ஆண்டு ஆவணிக்கு முற்பட்ட காலப்பகுதியிலான விபரங்கள் பாதிக்கப்பட்ட நபர்களது குடும்பத்தினரோடு நேரடியாகவோ, தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். 2006 ஆண்டு ஆவணிக்குப் பிற்பட்டதான அதாவது வன்முறை சம்பவங்களின் அதி உச்சக்காலப்பகுதியில் அதாவது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் தொடர்புகளை மேற்கொள்வது என்பது அச்சம் நிறைந்ததாகவேயுள்ளது. குறிப்பாக வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள நிசோர் (NESOHR) ஊழியர்கள் தொடர்புகளை மேற்கொள்வது இயலாத காரியமாக இருந்தது.

ஆகவே பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வேறு மார்க்கமாகவே பெறப்பட்டவையாகும். சிலர் அஞ்சல் வழியாகக்கூட நிசோருடன் (NESOHR) தொடர்புகொள்ள அஞ்சினார்கள். சிறிலங்காவின் அரச படைகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற வேறு மனிதஉரிமைகள் அமைப்பின் ஊடாகவே இதில் சிலவிடயங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. வேறுசில விடயங்கள் வழமைபோல இத்தகைய மனிதஉரிமை மீறல்கள் பற்றிய சம்பவங்களின் தகவல்களை சேகரிக்கின்ற உதவிஅரசாங்கஅதிபர் காரியாலயத்தின் ஊடாகவே பெற்றுக்கொள்ளப்பட்டன. சில விடயங்கள் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரே வழியாக இருந்தன.

இந்த முறைப்பாடுகளின் போது கொல்லப்பட்ட, காணாமல் போன குடிமக்களின் விபரங்களை சேகரிக்கின்ற பொழுது அவை வன்முறைகள் பற்றிய விபரங்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன. அத்தோடு குடிமக்கள் எவ்வளவு விலை கொடுத்தார்கள் என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. எப்படியாயினும் இது இந்த நிகழ்வுகளின் ஒருபக்க வெளிப்பார்வையே ஆகும். இதன் ஒட்டுமொத்தமான உடமைகள் இழப்பு, உயிர் இழப்பு, கல்வி பாதிப்பு, மக்களுடைய பௌதீக, உளவியல் நலன் பாதிக்கப்பட்டமை பற்றிய விபரங்களை வெளிக் கொண்டுவருவது என்பது முழுமையாக முடிந்த காரியமல்ல. இந்த கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் அப்பாவி பொதுமக்களது சரியான இழப்புகள் பற்றிய ஒரு விழிப்புணர்வுக்கு இத்தரவுகள் இட்டுச்செல்லுமென நிசோர் (NESOHR ) கருதுகின்றது.

## 01.*மன்னார்.பேசாலை படுகொலை – 23 டிசம்பர் 2005*

www.tamilarangam.net




மன்னார் மாவட்டத்தில் இலங்கை அரசபடைகளின்மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து படையினர் தமது கொலைவெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காணமுடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர். அவ்வாறே 23.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சேர்ந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்கள்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01 | திரேசா | 40 |
| 02 | இம்மானுவேல் குருஸ் | 38 |
| 03 | குருஸ் அந்தோனியம்மா | 38 |
| 04 | குருஸ் டிலக்சன் | 04 |

## 02. *திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை – 02 ஜனவரி 2006*



திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

www.tamilarangam.net

*இச்சம்பவத்திற் படுகொலை செய்யப்பட்டவர்கள்*

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | லோகிதராசா றொகான் | 20 |
| 02. | சண்முகராஜா சஜீந்திரன் | 19 |
| 03. | மனோகரன் வஜீகர் | 21 |
| 04. | தங்கத்துரை சிவானந்தன் | 20 |
| 05. | யோகராஜா கேமச்சந்திரன் | 22 |

*இச்சம்பவத்திற் காயமடைந்தவர்கள் விபரம்*

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | பரராஜசிங்கம் கோகிலராஜா | 21 |
| 02. | யோகராஜா பூங்குழலோன் | 20 |

## 03. *மானிப்பாய் படுகொலை* – 16 ஜனவரி 2006



யாழ்ப்பாணம் மானிப்பாய்ப் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்து சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில்ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். உயிரிழந்த மூத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினார். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் சேவையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*இச்சம்பவத்திற் கொல்லப்பட்டோர்*

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 1. | போஜன் அர்த்தநாரீஸ்வரி | 51 |
| 2. | தியாகேஸ்வரன் ரேணுகா | 30 |
| 3. | போஜன் சண்முகா | 24 |

*காயமடைந்தவர்கள் விபரம்*

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 1. | நாகேந்திரம் போஜன் | 54 |
| 2. | நாகேந்திரம் உல்லாசனன் | 26 |

## 04.*தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தல்* – 29 ஜனவரி 2006

www.tamilarangam.net



2006 ஜனவரி மாதம் 29ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னொரு பெண்ணான எஸ்.டோசினி என்பவரும் கடத்தல்காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர்களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு 2006ஆம் ஆண்டு மார்ச்மாதம் 10ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுத்திருந்தது. இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக்குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறிலங்கா அரசாங்கத்தால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறியுள்ளனர்.

***காணாமல் போயுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள்***

| *பெயர்* | *வயது* |
|---|---|
| 01. காசிநாதர் கணேசலிங்கம் | 53 |
| 02. தங்கராசா கதிர்காமர் | 43 |
| 03. தனுஸ்கோடி பிறேமினி | 25 |
| 04. தர்மராஜ் வசந்தராஜன் | 24 |
| 05. சண்முகநாதன் கஜேந்திரன் | 24 |
| 06. கைலாசபிள்ளை ரவீந்திரன் | 26 |
| 07. அருள்நேசராசா சதீஸ்கரன் | 23 |

## 05. *திருகோணமலை இனக்கலவரம்* – 12 ஏப்ரல் 2006







திருகோணமலை நகரில் 2006 ஏப்ரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப் பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன. 1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏப்ரல் 12ஆம் நாள் மாலை 4மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

இதையடுத்தே தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய தாக்குதல் சம்பவங்கள் சிங்களக் காடையர் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் எரிக்கப்பட்டதால் திருகோணமலை நகருக்கு மேலாக பெரும் புகை மூட்டம் காணப்பட்டது. மரக்கறிச் சந்தை, பஸ் நிலையப் பகுதி, மணிக்கூட்டுச் சந்தி, மீன் சந்தை, மத்திய வீதி, வடகரை வீதி, மடத்தடி, புகையிரதச் சந்தி, சிறிமாபுரம் போன்ற பகுதிகளிலும் லிங்கநகர், மட்கோ சந்திப் பகுதிகளிலும் தமிழர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு என்பனவற்றில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 10இற்கும் அதிகமான தமிழர்களும் முஸ்லிம் ஒருவரும் கொல்லப்பட்டனர். குண்டுவெடிப்பு இடம்பெற முன்னரே மூன்றுக்கும் அதிக லொறிகளில் அழைத்து வரப்பட்டிருந்த சிங்களக் காடையர் கும்பல் வடகரை வீதி, மத்திய வீதிப் பகுதிகளிலும் தமிழர்களுக்குச் சொந்தமான ஐந்திற்கும் அதிகமான பாரிய வர்த்தக நிலையங்களை கொள்ளையிட்டதன் பின்னர் தீவைத்து அழித்தனர்.

சித்திரைப் புதுவருடத்திற்காக துணிமணிகளையும், ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்துகொண்டிருந்த பல தமிழர்கள் இந்தச் சம்பவத்தின்போது அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டனர். நகரில் ஏற்பட்ட பதற்ற நிலைமை மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கடற்படையினர், பொலிசார், இராணுவத்தினர் பெருமளவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும், அவர்கள் வன்முறைகளைத் தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இதேவேளை அசம்பாவிதச் சம்பவங்கள் குறித்து திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பிற்கும், ஜனாதிபதிக்கும் உடனடியாகவே அறிவித்துள்ளார்.

***இச்சம்பவத்திற் கொல்லப்பட்டோர்***

| *பெயர்* | *வயது* |
| --- | --- |
| 01. T.மகாலக்சுமி | 42 |
| 02. T.செல்வகுமார் | 18 |
| 03. V.நந்தேஸ்வரன் | 28 |
| 04. V.வெங்கட்ராமன் | 30 |

## 06.வவுனியா கொம்புவைத்தகுளம் படுகொலை – 13 ஏப்ரல் 2006

வவுனியா மாவட்டத்தின் வடக்கே உள்ள பெரியமடு காட்டுப்பகுதிக்கு கடந்த 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் நாள் மூவர் நான்கு வேட்டை நாய்களுடன் வேட்டைக்குச் சென்றனர். அவ்வாறு வேட்டைக்குச் சென்ற இவர்கள் வீடு திரும்பி வராததினால் உறவினர்கள் தேடியும் அவர்களின் நிலை பற்றி அறியமுடியாததினால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் அவர்கள் தொடர்பான விடயங்களை அறிந்து தருமாறு முறைப்பாட்டினைச் செய்தனர்.

இவ்வாறு இவர்கள் காணாமல்போன ஐந்து நாட்களின் பின்னர் வவுனியா கொம்புவைத்தகுளம் காட்டுப்பகுதியினுள் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனர். இவர்களது முகங்கள் அசிற் ஊற்றப்பட்ட நிலையில் கருகிக் கிடந்தன. அத்துடன் ஒருவரது முகத்தில் ஆழமான வெட்டுக்காயமும் காணப்பட்டது.

இவர்களை சிறிலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரே செய்திருக்கக்கூடும் என அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர். இவர்கள் காணமால் போன மறுநாள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கறுப்புடை அணிந்த 05 படையினர் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி சென்றதை அக்கிராம மக்கள் கண்டதாகவும் கூறப்படுகின்றது.

www.tamilarangam.net

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்***

| *பெயர்* | *வயது* | *முகவரி* |
|---|---|---|
| 01. தியாகராசா குகனேஸ்வரன் | 36 | பனிக்கநீராவி, பெரியமடு, புளியங்குளம் |
| 02. சிவசம்பு நகுலேந்திரராசா | 44 | பனிக்கநீராவி, பெரியமடு, புளியங்குளம் |
| 03. சிவகுரு திரவியம் | 32 | மரையடித்தகுளம், ஓமந்தை |

## 07. *யாழ்.புத்தூர் படுகொலை* – 18 ஏப்ரல் 2006



புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கிவிடுவார். வழமைபோல் ஏப்ரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கரவண்டியில் மேலும் மூன்று நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில்நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கரவாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள்.

இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல ஸ்ரீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.

***இச்சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு***

| *பெயர்* | *வயது* |
|---|---|
| 01. கந்தசாமி கௌரிபாலன் | 32 |
| 02. செல்லன் கமலதாசன் | 25 |
| 03. தங்கராசா கவீந்திரன் | 23 |
| 04. மகாதேவன் கிசோக்குமார் | 22 |
| 05. சுப்பிரமணியம் கண்ணதாசன் | 27 |

## 08. திருகோணமலை மூதூர் படுகொலை – 25 ஏப்ரல் 2006

www.tamilarangam.net





திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்ரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறிலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறிலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களென 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் கே.மேரியான் என்பவரும் அவரது இரண்டு வயது மகனான மேரியான் கிசாந்தன், நாகையா ருக்குமணி, பத்தினியன் நாகம்மா மற்றும் வீரபத்திரர் பகவதிப்பிள்ளை ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என இனங்காணப் பட்டுள்ளனர்.

***இச்சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு***

| பெயர் | வயது |
|---|---|
| 01. G நேணுகா | 23 |
| 02. K.செல்வராணி | 32 |
| 03. M.கிருசாந்தன் | 04 |
| 04. N.றுக்குமணி | 49 |
| 05. N.றணிதமலர் | 56 |
| 06. P.நாகம்மா | 67 |
| 07. T.சுரேஸ்றூபன் | 23 |
| 08. T.றதீஸ் | 15 |
| 09. V.றாச்குமார் | 16 |
| 10. V.பகவதிப்பிள்ளை | 16 |
| 11. V.மயூரன் | 21 |
| 12. K.மெய்யன் | 21 |

## 09. உதயன் பணிமனைப் படுகொலை – 02 மே 2006



ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப்பாகவும் நடு நிலைமைத் தன்மையாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங்களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணிமனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப்படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த பணியாளர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந்தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவதுடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை

ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

www.tamilarangam.net


***இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள் விபரம் வருமாறு***

| | பெயர் | வயது |
|---|---|---|
| 01. | பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்) | 30 |
| 02. | இராசரத்தினம் ரஞ்சித்குமார் | 28 |

***காயமடைந்தவர்களது விபரம்***

01. உதயகுமார்
02. தயாகரன்
03. சதீஸ்

## 10.நெல்லியடிப் படுகொலை - 04 மே 2006



யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞர்கள் உயிரிழந்தனர். இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 02.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது.

இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும்போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

***இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்களின் விபரம்***

| | பெயர் | வயது |
|---|---|---|
| 01. | செல்வராசா சுமன் | 22 |
| 02. | வேலுப்பிள்ளை நிமலன் | 21 |
| 03. | நாகரத்தினம் நகுலேஸ்வரன் | 18 |
| 04. | பாலச்சந்திரன் கிரிசாந்தன் | 18 |
| 05. | தாமோதரம்பிள்ளை சர்மிலன் | 17 |
| 06. | நவரட்ணராஜா நாசண்ணா | 19 |
| 07. | சுப்பிரமணியம் சுபாஸ் | 19 |

## 11. யாழ்.மந்துவில் படுகொலை – 06 மே 2006

www.tamilarangam.net



யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு ஒரு மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக்குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும் மண்ணால் மறைக்கப்பட்ட இரத்தத் தடயங்கள் காணப்பட்டன. பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

***இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டோர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | கந்தசாமி பரிமேலழகன் | 22 |
| 02. | இரத்தினம் தயாரூபன் | 21 |
| 03. | பொன்னம்பலம் பர்த்தீபன் | 22 |
| 04. | வைகுந்தவாசன் வைகுந்தகுமார் | 22 |
| 05. | இராமச்சந்திரன் இராசகுமார் | 24 |
| 06. | செல்வரட்ணம் சிவானந்தன் | 24 |
| 07. | மார்க்கண்டு புஸ்பகாந்தன் | 26 |
| 08. | இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி | 35 |

## 12.யாழ். தீவகப் படுகொலை – 13 மே 2006



இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ்மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே தொடர்ந்து செல்ல

www.tamilarangam.net

அனுமதிக்கப்பட்டு வந்தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்‘ தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படுகொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத்துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலிலுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரணமாக தங்கியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர்.

பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த 04 மாதச்சிறுவனும் நான்கு வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயிரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங்கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத்தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச்சாலை உரிமையாளரான செந்தூரன் என்பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என்பவரைச் சுட்டுக்கொன்றனர்.

இவ்வாறாக அன்றிரவு 14 வரையான பொதுமக்கள் வரை உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

***இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்களின் விபரம் வருமாறு.***

| | *பெயர்* | *வயது* | | | |
|---|---|---|---|---|---|
| 01. | பாலசாமி கேதீஸ்வரன் | 25 | 08. | யோசப் அந்தோனிமுத்து | 64 |
| 02. | கேதீஸ்வரன் அனெக்எஸ்தர் | 25 | 09. | சின்னத்துரை சிவநேசன் | 46 |
| 03. | கேதீஸ்வரன் தனு‘காந் | 04 | 10. | எம்.சண்முகலிங்கம் | 60 |
| 04. | கேதீஸ்வரன் யதுசன் | 04 மாதம் | 11. | சண்முகலிங்கம் பரமேஸ்வரி | 55 |
| 05. | ஆபிரகாம் றொபின்சன் | 28 | 12. | சண்முகலிங்கம் காந்தரூபன் | 22 |
| 06. | செல்லத்துரை அமலதாஸ் | 28 | 13. | இரத்தினம் செந்தூரன் | 22 |
| 07. | கணேஸ் நவரட்ணம் | 50 | | | |

## 13.மட்டு.வடமுனை நெடுங்கல் படுகொலை – 07 யூன் 2006

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள கிராமங்களில் வடமுனையும் ஒன்றாகும். இது வெலிக்கந்தையிலிருந்து 07கிலோமீற்றர் தூரத்திலும் வாழைச்சேனையிலிருந்து 35கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் குறைவடைந்திருந்தாலும் மகிந்த ராஜபக்ச சனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான தாக்கதல்களும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. நாளுக்கு நாள் இலங்கையின்

www.tamilarangam.net
வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு வடமுனைப் படுகொலையும் அமைந்துள்ளது.

07.06.2006 அன்று காலை 10மணியளவில் வடமுனையிலிருந்து பொருட்கள் வாங்குவதற்காக உழவு இயந்திரத்தில் 20பொதுமக்கள் வரை பயணித்துக் கொண்டிருந்தனர். நெடுங்கல் எனும் இடத்தில் இவர்களை இலக்கு வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரால் கண்ணிவெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் ஆறு மாதக் குழந்தை உட்பட 10பேர் உயிரிழந்ததுடன் 03குழந்தைகள் உட்பட 09பேர் படுகாயமடைந்தனர். இப்படுகொலையானது, ஒரு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களை குடியேற்றும் ஒரு செயற்பாட்டிற்கான ஆரம்பமாகவே நோக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் இவ் வடமுனைப்பகுதி மக்கள் இலங்கை இராணுவத்தால் பல்வேறு இன்னல்களையும் சந்தித்து வந்தனர். 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் இப்பகுதி மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். 1995ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் இங்கு மீளக்குடியமரத் தொடங்கினர். 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மக்கள் இங்கு பெருமளவில் குடியேறத் தொடங்கினர். ஆனால் மீண்டும் தமக்கு அந்நிலை ஏற்படுமோ என்ற ஏக்கத்தில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

***வடமுனைச் சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள் விபரம்***

| | *பெயர்* | *வயது* | | |
|---|---|---|---|---|
| 01. | சரவணமுத்து சந்திரகுமார் | 10 | 06. ஐயாத்துரை சிறிமா | 33 |
| 02. | சரவணமுத்து தினேஸ்குமார் | 11 | 07. காசிப்பிள்ளை கோமதி | 40 |
| 03. | சரவணமுத்து மதியழகன் | 22 | 08. தளையசிங்கம் தனலட்சுமி | 48 |
| 04. | மதியழகன் கவிதா | 20 | 09. பத்தினியன் சின்னத்தம்பி | 56 |
| 05. | சிவநேசன் மதிமலர் | 24 | 10. சிவநேசன் சிந்துஜன் | 06மாதம் |

***காயமடைந்தோர் விபரம்***

| *பெயர்* | *வயது* | | |
|---|---|---|---|
| 01. பிரதீபன் | 01 | 06. வீரக்குட்டி சின்னத்தம்பி | 50 |
| 02. சரவணமுத்து சந்திரன் | 14 | 07. பத்தினியன் சின்னத்தங்கச்சி | 56 |
| 03. சங்காணம் இராஜலட்சுமி | 40 | 08. கவிதா | 02மாதம் |
| 04. மயில்வாகனம் ஜெயரெட்ணம் | 46 | 09. சிறீதரன் அனோஜன் | 06 |
| 05. தங்கவேல் | 46 | | |

## 14.மன்னார். வங்காலைப் படுகொலை – 08 யூன் 2006



வங்காலைக் கிராமமானது மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. இக் கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு சுகந்தபுரி, தோமஸ்புரி, பஸ்புரி போன்ற சிறு கிராமங்கள் காணப்படுகின்றன. தோமஸ்புரியில் வசித்துவந்த மார்ட்டின் என்பவரும் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் இலங்கை இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

www.tamilarangam.net

மேற்படி சம்பவமானது 08.06.2006 அன்று இரவு தோமஸ்புரியிலுள்ள அவர்களின் வீட்டில் இடம் பெற்றுள்ளது. தச்சுத் தொழிலாளியான மார்ட்டின் என்பவர் தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தும் கருவிகளாலேயே படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னர் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார். மேலும் பிள்ளைகள் இருவரும் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் தந்தையும் பிள்ளைகளும் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தனர்.

இச்சம்பவத்திற்கு நேரடியான சாட்சியங்கள் இல்லாவிடினும் இராணுவச் சப்பாத்துத் தடயங்கள் அதிகளவு காணப்படுகின்றமையும் அப்பகுதியில் சம்பவதினம் இரவு இராணுவ நடமாட்டம் காணப்பட்டதையும் அப்பகுதி மக்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

***இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | மூர்த்தி மார்ட்டின் | 35 |
| 02. | மார்ட்டின் மேரி மெடலின் (சித்திரா) | 27 |
| 03. | மார்ட்டின் ஆன் லூக்சியா | 09 |
| 04. | மார்ட்டின் ஆன் நிலக்சன் | 07 |

## 15.யாழ். கைதடி மனிதப் புதைகுழி – 06,07,08 யூன் 2006



இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மாவட்டங்களில் அதிகளவு மக்கள் செறிவைக் கொண்ட மாவட்டமாக யாழ்.மாவட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏ-9 நெடுஞ்சாலையில் யாழ் நகரில் இருந்து 10கிலோ மீற்றர் தூரத்தில் கைதடிப் பிரதேசம் அமைந்தள்ளது.

1996ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டினை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்ததன் பின்னர் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர். அப்போது அவர்களில் சிலர் கைதடியை அண்மித்த செம்மணிப்பகுதியிலிருந்து எலுப்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர். அதே போல கைதடித் தரவை வெளியில் மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

06.06.2006 அன்று கைதடித் தரவைப்பகுதிக்கு மண் அகழ்விற்காகச் சென்றவர்கள் அப்பகுதிக்குள் புதைக்கப்பட்டிருந்த சடலமொன்றைக் கண்டு அது தொடர்பாக தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் தேடுதல் பணியை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதவானால் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் பொலிசாரும் பொதுமக்களுமாக அப்பகுதியில் தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.

மூன்று நாட்களாக இப்பணி இடம்பெற்றது. இதில் நான்கு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் யாழ்.குடா நாட்டில் பரவலாக காணாமற்போனோர் இவ்வாறு புதைக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர். காணமற்போனோரின் உறவினர்கள் தமது உறவுகளின் நிலை தெரியாது கண்ணீருடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

***இப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டவர்கள் (6ஆம், 07ஆம், 08ஆம் நாட்களில்)***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | வைதீஸ்வரசர்மா வெங்கடகிருஸ்ணசர்மா | 50 |
| 02. | விசுவலிங்கம் பரணீதரன் | 29 |
| 03. | இரு ஆண்களின் சடலங்கள் | |

www.tamilarangam.net

## 16.பேசாலைத் தேவாலயப் படுகொலை - 17 ஜீன் 2006



2006 ஜீன் 17ஆம் நாள் அதிகாலை மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் ஸ்ரீலங்காக் கடற்படையினருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியை அடுத்து பேசாலையிலுள்ள தமிழ்க் குடிமக்களை பழிவாங்கத் தொடங்கினார்கள். தமிழர்கள் வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தார்கள். கடற்சண்டையில் தோற்கடிக்கப்பட்ட கடற்படையினர் பேசாலைப் பகுதியைச் சுற்றிவளைத்து கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டார்கள். அவ்வாறாக சுட்டுக்கொண்டு வந்த இராணுவத்தினர் தேவாலயத்தினுள்ளே திரண்டு நின்ற மக்கள் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் ஒரு பெண் கொல்லப்பட்டார்.

கடலில் நிகழ்ந்த மோதலைப் பார்ப்பதற்காக கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் மீதும் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். 05 மீனவர்கள் அவர்களது படகுகளுக்கு உள்ளேயே இறந்து கிடக்க காணப்பட்டனர்.

கரையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் சிறிலங்காக் கடற்படையினரால் தீ மூட்டப்பட்டுள்ளன. 40படகுகளும் 25வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. 10மில்லியன் பெறுமதியான மீன்பிடி வலைகளும் எரிக்கப்பட்டுள்ளன.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்***

| | பெயர் | வயது |
|---|---|---|
| 01. | A.புனிதவாசன் | 29 |
| 02. | B.ரவீந்திரன் | 29 |
| 03. | K.மேகராசா | 25 |
| 04. | K.விஜயயகாந் | 27 |

## 17.மட்டு.மயிலம்பாவெளிப் படுகொலை - 27 யூன் 2006

மட்டக்களப்பு நகரிலிருந்து வடபகுதியிலல் ஏழு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மயிலம்பாவெளி எனுமிடத்தில் 2006 யூன் 27ஆம் நாள் இரவு 8.30 மணியளவில் கட்டடத்தொழிலுக்குச் சென்றுவிட்டு தங்களது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மூவர் மீது அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர். இதன் போது மூன்று கட்டடத் தொழிலாளர்களும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

ஆயுததாரிகள் 9mm ரக கைத்துப்பாக்கியினையே பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 250மீற்றர் தூரத்தில் மயிலம்பாவெளி இராணுவ முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட மூவரும் புல்லுமலைக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி கிராமத்தில் தஞ்சமடைந்தவர்கள் என்பதும் நினைவு கூறத்தக்கது.

*இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்*

www.tamilarangam.net

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | சின்னையா மகேஸ்வசந்தகுமார் | 26 |
| 02. | நவரட்ணம் அருணசிறி | 22 |
| 03. | முத்துக்குமரகுருவன் கிருஸ்ணகுமார் | 21 |

## 18.மன்னார் முசலிப் படுகொலை – 28 யூன் 2006

மன்னார் மாவட்டத்திலுள்ள முசலி கொக்குப்படையான எனும் கிராமத்தில் 2006 யூன் 28ஆம் நாள் மாலை 4.30 மணியளவில் மணல் ஏற்றிக்கொண்டு திரும்பிய உழவு இயந்திரத்தை இலக்குவைத்து சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த் தாக்குதலினை மேற்கொண்டனர். அதில் பயணம் செய்த மூவரும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக முசலி பிரதேச செயலரால் இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதும் அவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிடவில்லை.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | சா.யக்கோபு | 51 |
| 02. | சுதாகர் | 22 |
| 03. | செபமாலை சுரேஸ் | 29 |

## 19. அக்சன்பெயம் (Actionfaim) தன்னார்வை நிறுவனப் படுகொலை 05 ஓகஸ்ட் 2006



இலங்கையின் கிழக்குமாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் ஒன்றே மூதூர் ஆகும். இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு இப்பிரதேசத்திலுள்ள மாவிலாறு அணையைத் திறப்பதற்கான யுத்தம் ஒன்றை 2006ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கை அரசு தமிழர் பகுதிகள் மீது விதித்துவந்த பல்வேறு பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் நடாத்திய மக்கள் இறுதியில் மாவிலாறு அணைக்கட்டை பூட்டிவிட்டார்கள்.

இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத இலங்கை அரசு தனது படைகளை ஏவி மாவிலாறு அணைக்கட்டை திறக்க முயற்சித்தது. இலங்கைத்தீவில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் கவனத்திற்கொள்ளாது தமிழர் பிரதேசம் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப்புலிகளும் மூதூர் பகுதி இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் மூதூர் பகுதி இராணுவ நிலைகளை தகர்த்துவிட்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையின் விதிமுறைக்கமைய தமது பழைய நிலைகளில் மீண்டும் நிலைகொண்டனர்.

www.tamilarangam.net

இதன்பின்னர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05ஆம் நாள் மூதூர் பகுதிக்குள் நுழைந்த இலங்கை அரச படைகள் அப்பகுதி மீது தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கு மக்கள் பலர் இராணுவத்தினராற் கொல்லப்பட்டனர். இதன் ஓர் அங்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு உதவிகளையும் செய்து வந்த. “Action faim” எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் 17பேரை அப்பிரதேசத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கோரமான முறையில் படுகொலை செய்தனர்.

“Action faim” நிறுவனமானது பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டது. இந்நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை வழங்கும் நோக்கில் திருகோணமலை, மூதூரில் தமது அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டுவந்தது. மூதூர்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிக்கொண்டிருந்த வேளை அவர்களது அலுவலகத்திற்குள் வைத்தே, அவர்களது நிறுவனச் சீருடையில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களில் நான்கு பேர் பெண்களாவர். ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்தில் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவத்தினர் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். சடலங்களை மீட்டு பரிசோதித்தபோது இப்பணியாளர்கள் ஒவ்வொருவரது உடலிலும் 20 வரையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இப்படுகொலையுடன் இலங்கை அரசே தொடர்புபட்டுள்ளது என அப்பகுதி மக்களும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கையும் சாட்சியங்களாகும்.

**இச்சம்பவத்தில் உயிரிழந்த அக்சன் பெயம் (Action faim) நிறுவன பணியாளர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.**

01. றிச்சட் அருள்ராஜ்
02. சிவபாலன் றோமிலா
03. சிங்கராசா பிறீமஸ் ஆனந்தராசா
04. சக்திவேல் கோணேஸ்வரன்
05. செல்லையா கணேஸ்
06. கணேசு சிறிதரன்
07. யோகராசா கோடீஸ்வரன்
08. அம்பிகாபதி ஜெயசீலன்
09. அப்துல் லத்தீன் மொகமட் ஜப்பா
10. முத்துலிங்கம் நர்மதன்
11. கணேசு கவிதா
12. மாதவராசா கேதீஸ்வரன்பி. பார்த்தீபன்
13. ஜ.முரளிதரன்
14. வைரமுத்து கோகிலவதனி
15. கனகரட்ணம் கோவேந்தினி
16. மோகனதாஸ்
17. ரவிச்சந்திரன் றிசிகேசன்

## 20. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08 ஓகஸ்ட் 2006



இலங்கையின் வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே நெடுங்கேணி ஆகும். இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினரின் ஆழஊடுருவும் படையணியினரால் பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள்மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படுகின்றன. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதியினை நொடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையே வழங்கிவருகின்றது. பெரிதளவிலான வசதிகளைக் கொண்டிராத இம்மருத்துவமனை பாரியளவில் பாதிப்பிற்குள்ளான நோயாளர்களை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றமை வழமையானதே.

www.tamilarangam.net

அவ்வாறே 2006 ஓகஸ்ட் 08ஆம் நாள் இரவு 7மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலையிலிருந்து கர்ப்பிணித்தாய் ஒருவரை ஏற்றிச்சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு இரவு 10மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவுவண்டி என்ற தகவலை வழங்கும் ஒலியுடனேயே திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறு நோயாளர் காவுவண்டி நெடுங்கேணி வீதியில் உள்ள சமளங்குளம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையினரால் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்துகொண்டிந்த வைத்தியர் ஜெயபாலினா அவரது மனைவி, தாதியர் இருவர் மற்றும் சாரதி ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.

வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையான சூழ்நிலைகளிலேயே வன்னி வைத்தியசாலைகள் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், நெடுங்கேணி சுற்றியல்கூறு வைத்திய சாலையில் ஒரேயொரு வைத்தியர்தான் கடமையாற்றுகின்றமையும் மிகவும் கவலைக்கிடமானதே.

***இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் விபரம் வருமாறு:***

| | *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|---|
| 01. | கதிர்காமத்தம்பி ஜெயபாலினா | 60 | வைத்தியர் |
| 02. | ஜெயபாலினா பொன்னம்மா | 52 | வீட்டுப்பணி(வைத்தியரின் மனைவி) |
| 03. | ஜெகாநந்தன் நகுலேஸ்வரி | 32 | மருத்துவ தாதி |
| 04. | இராஜலிங்கம் ஜெனனேஸ்வரி | 23 | மருத்துவ தாதி |
| 05. | கோபாலசுந்தரம் | 57 | சாரதி |

## 21.*கிழக்குப் படுகொலைகள் – ஆகஸ்ட் – டிசம்பர் 2006*



தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக் குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப் படவில்லை. இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப் பட்டிருந்ததால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுகள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரசஅதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்துவிடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப்பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின்

www.tamilarangam.net

தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 6ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்லவேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை ஸ்ரீலங்கா இராணுவம் நடாத்தியது. ஸ்ரீலங்கா இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத்துறைமுகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய ஸ்ரீலங்கா இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன்போது நூற்றுக்கணக்கானோர் இறந்தனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாதகாலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீலங்கா கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் ெ'ல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு ஸ்ரீலங்கா கண்காணிப்புக்குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல்வதை ஸ்ரீலங்கா அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளுக்கு மேலாக முயற்சித்ததையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் வெற்றிகண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையைவிட்டு நேர காலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்டிக்கப்பட்டடார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்ற ஐந்து பொதுமக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறுவளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச் செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

*உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு*

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 01. | அ.அரசரட்ணா | 42 |
| 02. | கோ.கணேசராஜா | 46 |
| 03. | ஞா.சறோஜா | 10 |
| 04. | ஞா.றகுமார் | 06 |
| 05. | ஞா.சீவிதா | 10 |
| 06. | ஞா.மஞ்சுளாதேவி | 23 |
| 07. | இ.பவானி | 24 |
| 08. | க.நற்குணம் | 36 |
| 09. | மு.தங்கவேல் | 22 |
| 10. | சீ.மகாலிங்கம் | 32 |
| 11. | செ.சந்திரகலா | 18 |
| 12. | சி.திரவியமலர் | 55 |
| 13. | சி.முத்துலிங்கம் | 45 |
| 14. | சி.ரஸ்யப்பிரியன் | 01 |
| 15. | சி.சிவகுமார் | 25 |
| 16. | சா.தவன்ஜா | 21 |
| 17. | சு.யோகேஸ்வரன் | 29 |
| 18. | சு.கணபதிப்பிள்ளை | 62 |
| 19. | த.பூமணி | 45 |
| 20. | வே.தர்மலிங்கம் | 50 |
| 21. | ந.டேவிட் | 25 |
| 22. | ந.குணராசா | 22 |
| 23. | ந.பாக்கியராசா | 40 |
| 24. | ந.விமலேந்திரன் | 35 |
| 25. | நா.யோகேஸ்வரன் | 28 |
| 26. | நகுலேஸ்வரன் | 32 |
| 27. | நா.திரவியமலர் | 65 |
| 28. | ந.தனுசலீன் | 04 |
| 29. | ந.நிசாந்தன் | 20 |
| 30. | பா.நாகேந்திரம் | 20 |
| 31. | பா.தயாநந்தினி | 22 |
| 32. | ப.கோணேஸ்வரன் | 31 |
| 33. | பி.தவனேசன் | 36 |
| 34. | ற.றாமச்சந்திரன் | 32 |
| 35. | இ.பிரபு | 17 |
| 36. | ற.சதுர்சன் | - |
| 37. | ற.விஜயா | 30 |
| 38. | ந.தியாகராசா | 48 |
| 39. | அ.செல்வறட்ணம் | - |
| 40. | ற.கோபிநாத் | 22 |
| 41. | க.பத்மா | - |
| 42. | கு.தெய்வகரன் | - |
| 43. | மா.நாகேஸ்வரன் | - |
| 44. | மா.சுந்தரராஜா | - |
| 45. | நா.இந்திரன் | 46 |
| 46. | நா.பிறேமலதா | 35 |
| 47. | சி.சிவசோதி | - |
| 48. | வ.சுமநாதன் | - |
| 49. | வெ.கோணேஸ்வரன் | - |
| 50. | வி.றதிகலா | - |
| 51. | யோ.சிதம்பரம் | 45 |
| 52. | அ.அரசறட்ணம் | 33 |
| 41. | ச.சண்முகநாதன் | 29 |
| 42. | ச.சந்திரசேகரன் | 22 |
| 43. | ச.கோஸ்பிரியன் | - |
| 44. | சி.பவானி | 22 |
| 45. | செ.தர்மலிங்கம் | 31 |
| 46. | வ.திவ்வியா | 14 |
| 47. | ஜீ.சித்திரவேல் | - |
| 48. | கா.றாஜேஸ்வரன் | - |
| 49. | றா.தேவராச் | 25 |
| 50. | சி.சிவசங்கர் | 27 |
| 51. | வெ.ஆறுமுகம் | 28 |
| 52. | க.புஸ்பன் | 25 |
| 53. | க.றதி | 31 |
| 54. | க.றஜீன்திரன் | 27 |
| 55. | க.சங்கர் | 23 |
| 56. | க.சாந்தகனகம் | 20 |
| 57. | கோ.நாகேந்திரன் | 70 |
| 58. | கோ.தனபாக்கியம் | 28 |
| 59. | கோ.தவராசா | 32 |
| 60. | லோ.சசிகரன் | 26 |
| 61. | ம.வரதன் | 24 |
| 62. | மா.கள்ளிப்பிள்ளை | 52 |
| 63. | மு.சிவமணி | 58 |
| 64. | மு.பாஸ்கரன் | 29 |
| 65. | ம.குணராசா | 31 |
| 66. | அ.யோகநாதன் | 12 |
| 67. | ஆறுமுகம் | 34 |
| 68. | சு.நந்தினி | - |
| 69. | அ.யோகநாதன் | 26 |
| 70. | பா.தவமணி | 27 |
| 71. | செ.ஜெயகாந்தன் | 24 |
| 72. | டி.பட்மசிறி | 27 |
| 73. | க.சசிக்குமார் | 17 |
| 74. | T. பூமணி | - |
| 75. | T.மஞ்சுளாதேவி | - |
| 76. | சு.கோமளாதேவி | 32 |
| 77. | ச.கிளிராசா | 50 |
| 78. | கு.காந்தன் | 22 |
| 79. | வே.றாஜன் | 35 |
| 80. | T.குமார் | 07 |
| 81. | T.டயானா | 15 |
| 82. | A.வேல்முருகா | 47 |
| 83. | ச.கிளியரசன் | 50 |
| 84. | கு.சத்தியராசா | 17 |
| 85. | கலாபவனம் | 45 |
| 86. | சேரன் | - |
| 87. | சி.குணமணி | 25 |
| 88. | ஞா.கோபால் | 19 |
| 89. | இ.தர்சினி | 07 |
| 90. | ஜெ.மாணிக்கப்போடி | 19 |
| 91. | ஜெ.சகுலேஸ்வரன் | 21 |
| 92. | க.அஜந்தன் | 15 |
| 93. | S.ஜெயகாந்தன் | 21 |
| 94. | S.முகிருபறாச் | 30 |
| 95. | S.சிவனேசன் | 25 |
| 96. | S.தயாகரன் | 29 |
| 97. | ச.மாணிக்கப்போடி | 27 |
| 98. | செ.ஸ்ரீகாந்தராசா | 17 |
| 99. | சி.நிறஞ்சன் | 20 |
| 100. | சி.நித்தியானந்தம் | 22 |
| 101. | வி.விஸ்வலிங்கம் | 19 |
| 102. | விக்னேஸ்வரன் | |
| 103. | த.நிமலநாதன் | 34 |
| 104. | வி.துரைசாமி | |
| 105. | த.விவேகானந்தன் | 36 |
| 106. | வே.கதிர்காமத்தம்பி | 55 |
| 107. | வி.யாழினி | 13 |
| 108. | A.ரகுவரன் | 17 |
| 109. | I.பவானி | 23 |
| 110. | I.டெனிஸ்சிவானந்தன் | 27 |
| 111. | K.ஜெயானந்தி | 16 |
| 112. | K.கிருபேஸ்வரன் | - |
| 113. | K.நற்குணம் | 33 |
| 114. | K.சரத்பாபு | 18 |
| 115. | M.கழிப்பிள்ளை | 52 |
| 116. | M.தவராசா | 34 |
| 117. | C.யோகேஸ்வரன் | - |
| 118. | C.றவீந்திரராசா | - |
| 119. | pகமல் | 17 |
| 120. | p.கிருஸ்ணபிள்ளை | 56 |
| 121. | S.ஜீவாநந்தன் | 31 |
| 122. | S.நந்தினி | 13 |
| 123. | S.றஸ்யப்பிரியன் | - |
| 124. | S.சந்திரிக்கா | 17 |
| 125. | S.தவப்பிரியா | 20 |
| 126. | T.சிவராசா | - |
| 127. | V.பாலகுமாரன் | 19 |
| 128. | V.கதிர்காமத்தம்பி | 51 |
| 129. | V.றணீஸ்வரன் | 17 |
| 130. | அ.சுதர்சினி | 17 |
| 131. | கா.சரஸ்வதி | 17 |
| 132. | நா.றவீந்திரராசா | 41 |
| 133. | றா.சாளினி | 4 |
| 134. | ர.றாமச்சந்திரன் | 30 |
| 135. | சு.மகேந்திரராசா | 43 |
| 136. | சு.றாஜேஸ்வரன் | 26 |
| 137. | தி.றேகன் | 21 |
| 138. | A.பிரியா | - |
| 139. | A.தமயந்தி | - |
| 140. | V.தர்மலிங்கம் | - |
| 141. | சேரன் | - |
| 142. | சி.குணரட்ணம் | 60 |
| 143. | சி.குணமணி | 60 |
| 144. | வி.சுசிகரன் | 10 |
| 145. | க.கோமளாதேவி | 32 |
| 146. | A.வனிதா | - |
| 147. | வே.றாஜன் | - |
| 148. | ஆ.மேனா | 10 |
| 149. | V.தர்மலிங்கம் | |
| 150. | சி.சந்திரன் | 39 |
| 151. | சி.சந்திரமூர்த்தி | 23 |
| 152. | சி.பாக்கியராஜா | 30 |

www.tamilarangam.net

153. சி.இந்திரன் 46
154. சி.விஜயா 34
155. சு.கோணேஸ்வரன் 28
156. சு.யுவந்தன் 10
157. த.விறதறாஜ் 22
158. த.பிள்ளையான் 51
159. த.றஞ்சன் 24
160. த.யோகேஸ்வரன் 27
161. த.சுமதி 42
162. த.சந்திரன் 20
163. தி.தர்சிகா 11
164. தி.தஸ்காந்தி 16
165. வ.குணவதி 58
166. வே.மனோகுமார் 28
167. S.திலசிகா 09
168. S.கோகுலவாணி -
169. S.சோதி -
170. S.கேமலதன் 09
171. p.மயில்வாகனம் -
172. N.தீபன் 17
173. M.நாகேஸ்வரன் 38
174. கு.சத்தியராசா 17
175. ஆனந்தஜோதி 24
176. ஆ.மேனா 10
177. கலாபவனம் 45
178. T.சர்மிளா -
179. K.நிறுசாந்தினி 12
180. கு.காந்தன் 22
181. ஆனந்தஜோதி 24
182. T.சர்மிளா -
183. குணரட்ணம் 60
184. வி.வசீகரன் 10

## 22. *அல்லைப்பிட்டிப் படுகொலை* - 13 ஆகஸ்ட் 2006



யாழ்ப்பாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் தீவுகளில் அல்லைப்பிட்டியும் ஒன்றாகும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே அல்லைப்பிட்டிக்கு சமீபமாக சண்டை ஆரம்பித்ததும் மக்கள் அடைக்கலம் புகுந்த பிலிப்நேரி தேவாலயப் பக்கமாக இராணுவத்தினர் கண்டபடி சுட்டார்கள். இதில் பல எண்ணிக்கையானோர் இறந்ததாக கூறப்படுகின்றது. இது இன்றுவரை பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த செல்தாக்குதல் சம்பவத்தைக் கண்ட பில்ப்நேரி தேவாலய பங்குத்தந்தை ஜிம் பிறவுணும் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டார். இந்தச் செல்தாக்குதலுக்கு ஆளான தன்னை இனம்காட்ட விரும்பாத இளம் பெண் ஒருவர் பின்பு இந் நிகழ்வு தொடர்பான தமது அனுபவம்பற்றி எழுதியுள்ளார். அந்த இரவின் நிகழ்வு தொடர்பாக வேறு பதிவுகள் இல்லாததால் அவரது பதிவு மிகவும் முக்கியமானது. அவரது கூற்றுப்படி எல்லா இடத்தையும் சுற்றி செல் விழுந்து வெடித்தவண்ணம் இருந்ததால் தாங்கள் மாட்டிக் கொண்டதாக நினைத்தார்கள். அவர்கள் பிலிப்நேர் தேவாலயத்தில் அடைக்கலமடைந்தனர். பின்பு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தேவாலயத்திற்கு வந்து அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அழித்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மக்களை கேடயமாக பாவித்ததோடு தமது முகாமுக்கு அண்மித்தும் அவர்களை கைவிட்டனர். எனவே மக்கள் செல்தாக்குதலுக்கு மத்தியில் மீண்டும் தேவாலயத்தை நோக்கிச்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இராணுவத்தின் நோக்கை மக்கள் உணர்ந்து கொள்ளும்வரை பலமுறை இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொண்டனர். சில மணித்தியாலங்களுக்கு பிற்பாடு செல்தாக்குதல் நேரடியாக தேவாலயத்துக்கு வந்தது. கடலிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தநேரத்தில் பலர் இறந்துவிட்டார்கள் பெற்றோரை பிள்ளைகள் இழந்தனர். இந்த அக்கிரமத்தின் பின்பு உடல்களை மீட்பதற்கு தந்தை ஜிம் பிறவுணும் முயன்றபோது இராணுவம் அதையும் தடுத்தது. இன்றுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்தப் புத்தகத்தின் 1ஆம் தொகுதியில் குறிப்பிடப்பட்ட 1990இல் இடம்பெற்ற பெரும்தொகையானோர் காணாமல் போன சம்பவத்தின் மையமாக இதே பிலிப்நேரி

www.tamilarangam.net

தேவாலயம் விளங்குகிறது. அந்தவகையில் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீதான எறிகணைத் தாக்குதலும் அமைகின்றது.

***சம்பவத்தில் உயிரிழந்த மக்களின் விபரங்கள்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | A.யோகன் றொபிற் | 41 |
| 02. | K.மரிமஞ்சுளா | 45 |
| 03. | K.மெனிஸ் | 19 |
| 04. | K.மைக்கல் | 55 |
| 05. | K.நடராஜா | 60 |
| 06. | K.தெய்வகுமார் | 28 |
| 07. | K.உதயகுமார் | 35 |
| 08. | L.ஞானப்பிரகாசம் | 70 |
| 09. | M.றமேஸ் | 26 |
| 10. | P.தேவநாயகி | 30 |
| 11. | P.வேலிகை | 20 |
| 12. | S.ஆனந்தம் | 51 |

## 23. *முல்லை. வள்ளிபுனம் செஞ்சோலைப் படுகொலை* – 14 ஓகஸ்ட் 2006




முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஓகஸ்ட் 10ஆம் நாள் முதல் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சிநெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

மாணவர்கள் பயிற்சி நெறியில் பங்குபற்றிக்கொண்டிருந்த வேளை இலங்கை வான்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஓகஸ்ட் 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவிகள் மற்றும் இரு பணியாளர்கள் உட்பட 54பேர் உயிரிழந்தனர். 130 மாணவிகள் படுகாயமடைந்ததுடன் பல மாணவிகள் சிறு காயங்களுக்குமுள்ளாகினர். படுகாயமடைந்தவர்களில் மூன்று மாணவியர்களுக்கு கால்கள் துண்டிக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவிகள் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். ஸ்ரீலங்கா பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவிகளையும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவிகளும் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்தியசாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவிகளும் எங்கே தங்குகின்றார்கள் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவிகளது தடுத்துவைத்தலானது அவர்களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

www.tamilarangam.net

***உயிரிழந்த மாணவிகளில் பெயர் விபரங்கள் வருமாறு***

01. முத்தையா இந்திரா
02. முருகையா அருட்செல்வி
03. சிவமூர்த்தி கார்த்திகா
04. சந்தனம் சத்தியகலா
05. கனகலிங்கம் நிருபா
06. கனகலிங்கம் நிரு'ா
07. நவரட்ணம் சாந்தகுமாரி
08. நாகலிங்கம் கோகிலா
09. சண்முகராசா கவேந்தினி
10. பாலகிருஸ்ணன் மதினி
11. சிவமயஜெயம் கோகிலா
12. விவேகானந்தம் தட்சாயினி
13. சாந்தகுமார் சுகிர்தா
14. உதயகுமாரன் கௌசிகா
15. நல்லபிள்ளை நிந்துஜா
16. வீரசிங்கம் றாஜிதா
17. தம்பிராசா லக்சியா
18. மகாலிங்கம் வென்சிடியூலா
19. துரைசிங்கம் துதர்சினி
20. குபேந்திரச்செல்வம் லிகிதா
21. வரதராஜா மங்களேஸ்வரி
22. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி
23. நீலாயினார் நிவாகினி
24. தமிழ்வாசன் நிவேதிகா
25. சுந்தரம் அனோஜா
26. புவனசேகரம் புவனேஸ்வரி
28. தேவராசா சர்மினி
29. சிவானந்தராசா திவ்வியா
30. தம்பிராசா சுகந்தினி
31. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி
32. தனபாலசிங்கம் பகீறஜி
33. தணிகாசலம் தனுசா
34. பத்மநாதன் கலைப்பிரியா
35. மார்க்குப்பிள்ளை கெலன்சுதாயினி
36. இராசமோகன் கம்சனா
37. மகாலிங்கம் வசந்தராணி
38. கிரிதரன் டயானி
39. துரைசிங்கம் திசானி
40. வைரமுத்து கிருத்திகா
41. சந்திரமோகன் நிவேதிகா
42. நாகலிங்கம் தீபா
43. தம்பிராசா தீபா
44. திருநாவுக்கரசு நிரஞ்சுலா
45. இரவீந்திரராசா றம்ஜா
46. கணபதிப்பிள்ளை நந்தினி
47. விஜயபவன் சிந்துகா
48. நகுலேஸ்வரன் நி'ாந்தினி
49. தர்மகுலசிங்கம் கேமாலா
50. அருளம்பலம் யசோதினி
51. செல்வம் நிறோஜினி
52. தம்பிமுத்து தயாழினி

***உயிரிழந்த செஞ்சோலை பணியாளர்களது பெயர் விபரங்கள்***

01. சந்திரசேகரன் விஜயகுமாரி
02. சொலமொன் சிங்கராசா

***காயமடைந்த மாணிவிகளில் கிடைக்கப்பெற்ற பெயர் விபரம் வருமாறு.***

| | |
|---|---|
| 01. நாகலிங்கம் உசாந்தினி | 16 |
| 02. சதாசிவம் பிரியதர்சினி | 20 |
| 03. ரவீந்திரன் பிரியதர்சினி | 19 |
| 04. ஆறுமுகம் தயாளினி | 17 |
| 05. குலேந்திரன் சுயித்தா | 17 |
| 06. நடராசா சிறிவித்தியா | 18 |
| 07. சி.மதுசா | 17 |
| 08. குணநாதன் ஜசிதேவி | 19 |
| 09. சிவனேஸ்வரன் நகுலேஸ்வரி | 26 |
| 10. முருகேசு இந்திரவதனா | 18 |
| 11. குகனேந்திரன் அஜித்தா | 17 |
| 12. வெள்ளிரூபன் துசாந்தினி | 20 |
| 13. சுந்தரம்பிள்ளை கஜேந்தினி | 17 |
| 14. செல்வானந்தன் ஜான்சி | 17 |
| 15. நிர்மலகுமார் நிசாந்தி | 18 |
| 16. நடராசா கிந்துஜா | 18 |
| 17. மகேந்திரம் சர்மிளா | 18 |
| 18. சண்முகராசா தனுசா | 19 |
| 19. வெற்றிவேல் சுதர்சினி | 20 |
| 20. ரவிதாசன் சிந்துஜா | 17 |
| 21. சூரியகுமார் சியாமினி | 17 |
| 22. பூபாலசிங்கம் விஜிந்தா | 17 |
| 23. முருகன் கௌசி | 17 |
| 24. ஞானசேகரம் நிரூஜா | 17 |
| 25. மகாலிங்கம் கோபிகா | 16 |
| 26. புலேந்திரராசா சுதர்சினி | 19 |
| 27. நடராசாலிங்கம் கவிதா | 17 |
| 28. செல்வநாயகம் அமுதாசினி | 17 |
| 29. மகேந்திரராசா நிருசா | 17 |
| 30. கதிரேசன் பிரமிளா | 19 |
| 31. புஸ்பவதி | 21 |
| 32. ஆறுமுகநாதன் மேகலா | 17 |
| 33. கணேசலிங்கம் கோகிலா | 19 |
| 34. விஜயசிங்கம் நிதர்சினி | 17 |
| 35. றொபேட் யோகராசா துஸ்யந்தி | 18 |
| 36. செல்வரத்தினம் சர்மிளா | 18 |
| 37. சிவலிங்கம் கமலரூபினி | 18 |

www.tamilarangam.net

| | |
|---|---|
| 38. மாணிக்கராசா தயாவிழி | 18 |
| 39. சிறிஸ்குமார் வித்தியா | 18 |
| 40. இராஜேந்திரம் மீனலோஜினி | 17 |
| 41. தங்கவேல் கலைச்செல்வி | 19 |
| 42. ஜீவரட்ணம் கிருபாஜினி | 18 |
| 43. கலைச்செல்வன் கேமா | 17 |
| 44. சின்னராசா சுஜீவா | 18 |
| 45. மாணிக்கராசா தயாவிழி | 17 |
| 46. மாணிக்கம் கோமதி | 17 |
| 47. யோகராசா ரேகாந்தினி | 17 |
| 48. பாலசிங்கம் ஜானிகா | 18 |
| 49. கந்தசாமி சோபிகா | 18 |
| 50. அந்தோனிப்பிள்ளை விஜிதா | 19 |
| 51. மாணிக்கம் மேனகா | 18 |
| 52. கிட்ணன் சுலோஜினி | 18 |
| 53. ஜெயக்கொடி சங்கீதா | 18 |
| 54. இரத்தினசிங்கம் மேகலா | 18 |
| 55. ஆனந்தராசா மேரிபவிதா | 17 |
| 56. கணேசன் ரூபவதனி | 17 |
| 57. ஆனந்தராசா டயாணி | 18 |
| 58. கணபதிப்பிள்ளை சுஜிவா | 17 |
| 59. மகாலிங்கம் யாழினி | 19 |
| 60. அரசகுலசிங்கம் லக்சனா | 18 |
| 61. நாகராசா தனுசா | 17 |
| 62. கணேஸ் ராதிகா | 17 |
| 63. திருநாவுக்கரசு நிரஞ்சினி | 17 |
| 64. சண்முகலிங்கம் ஜெசினா | 18 |
| 65. துரைரத்தினம் சுபத்திரா | 18 |
| 66. புஸ்பானந்தி மயில்வாகனம் | 17 |
| 67. யாழினி மகாலிங்கம் | 17 |
| 68. சிவானந்தம் சிந்துஜா | 17 |
| 69. யோகராசா சாளினி | 17 |
| 70. உதயகுமார் பிரியா | 17 |
| 71. சிவானுப்பிள்ளை சுகந்தினி | 17 |
| 72. சபாரட்ணம் சௌமியா | 17 |
| 73. நவரத்தினசிங்கம் அனுசியா | 17 |
| 74. வேலுப்பிள்ளை தர்சனா | 17 |
| 75. பேணாட் பிரபாலினி | 17 |
| 76. ஆறுமுகம் உமாமகேஸ்வரி | 17 |
| 77. வையாபுரி யுகனாதேவி | 18 |
| 78. பொன்னையா துஸ்யந்தி | 18 |
| 79. யோகலிங்கம் வேஜினியா | 18 |
| 80. யோகராசா பிரபாஜினி | 18 |
| 81. இராசேந்திரம் அருள்நாயகதீபா | 17 |
| 82. அசோக்சந்திரன் ஜனனி | 18 |
| 83. வாமதேவா ஜனனி | 19 |
| 84. செல்வராசா சுஜிதா | 17 |
| 85. ஆனந்தராசா ரஞ்சிதா | 18 |
| 86. சிவராசா சயந்தா | 17 |
| 87. கணேசலிங்கம் இந்துஜா | 17 |
| 88. தெய்வேந்திரம்பிள்ளை வித்தியா | 17 |
| 89. இராசதுரை பிரசன்னா | 17 |
| 90. ஆனந்தராசா சுகிர்தா | 18 |
| 91. ஜெயக்கொடி கார்த்திகா | 17 |
| 92. புவியரசன் நிரூஜா | 17 |
| 93. மகேசலிங்கம் செந்துஜா | 18 |
| 94. தர்மராசா தயாரூபினி | 19 |
| 95. குமாரவேல் மாலினி | 17 |
| 96. பாலசிங்கம் சுமித்திரா | 19 |
| 97. தமிழ்முத்து தயாளினி | 19 |
| 98. நந்தகுமார் சுபா | 17 |
| 99. கைலாயப்பிள்ளை கலையரசி | 19 |
| 100. சிறி கஸ்த்துாரி | 18 |
| 101. தர்மபாலன் தர்சிகா | 16 |
| 102. சூரியகுமார் சிந்துஜா | 17 |
| 103. சாயினி | 17 |
| 104. ராஜேஸ்வரன் சிறிவித்தியா | 20 |
| 105. ரவிச்சந்திரன் சாயித்தியா | 18 |

## 24. *அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17 செப்ரெம்பர் 2006*

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன்குளம் உள்ளது. இந்த அணைக்கட்டு அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிறுவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்தவண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.



www.tamilarangam.net

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17ஆம் நாள் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறிலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள், சிங்களவர்களுக் கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொடர்ந்தும் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடுக்கும் நோக்கிலேயே சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப் பட்டதாக கருதப்படுகின்றது.

***இச்சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01 | எம். அனுர்தீன் | 15 |
| 02 | எம்.நபார் | 15 |
| 03 | எம்.சமுதீன் | 18 |
| 04 | எ.எம. பைசல் | 19 |
| 05 | எல்.அனிஸ் | 19 |
| 06 | எம்.ஜப்பர் | 20 |
| 07 | எஸ்.எல்.றிசாட் | - |
| 08 | ஏ.எம்.அஜ்மீர் | 18 |
| 09 | எம். பைரூப் | 19 |
| 10 | எம்.ஐ.சியம் | |

***காயமடைந்தவர்***

01. எம்.மீரமுகைதீன் (வயது 55)

## 25. முல்லை . புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை – 16 ஒக்ரோபர் 2006



முல்லைத்தீவுமாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் நாள் மாலை 5.15 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்கதலில் ஒரு மாதக்குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நியைில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான்காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் மரணமானார்.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01 | யூட்கிறிஸ்ரின் டன்சிகா | 01 |
| 02 | சிவகுமார் தனுசிகா | 14 |
| 03 | தவராஜா துசாந்தினி | 14 |
| 04 | தவராசா இந்திரா | 42 |

*இச்சம்பவத்தின் போது காயமடைந்தவர்களது பெயர் விபரம்*

www.tamilarangam.net

| | *பெயர்* | *வயது* | | *பெயர்* | *வயது* |
|---|---|---|---|---|---|
| 01 | முருகானந்தன் தியாகராஜா | 22 | 06 | பிறேமசிங் சிவாஜினி | 32 |
| 02 | கந்தசாமி நாகேந்திரம் | 34 | 07 | நாகேந்திரம் சுகந்தினி | 29 |
| 03 | வீரசிங்கம் நிதர்சன் | 12 | 08 | சர்மிலா | 09 |
| 04 | நாகராசா நிரோஜினி | 13 | 09 | மேலும் ஒருவர் | |
| 05 | புவனச்சந்திரன் புஸ்பலதா | 38 | | | |

## 26. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை

### 02 நவம்பர் 2006



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02ஆம் நாள் பிற்பகல் 2மணியளவில் நான்கு தடவைகள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதன்போது 16 குண்டுகள் வீசப்பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த வீடொன்று முழுமையாக அழிவடைந்ததுடன் அதிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக உயிரிழந்தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகியதோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவனை வளாகத்தில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. இங்கு வைத்தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்தனர். வைத்தியசாலையில் மேல்மாடிக் கூரையின் சீலிங் முற்றாகச் சேதமடைந்துள்ளது. விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத்தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னங்கள் தாக்கியுள்ளன. அதனால் அவற்றின் கூரைப் பகுதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறிஓடினர். நடக்கமுடியாத நோயாளரை உறவினர்கள் வந்து கூட்டிச்சென்றனர். இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இத்தாக்குதலின் காரணமாக பாடசாலை மாணவர்கள், மக்கள் எனப் பலரும் பெரும் அச்சத்துடன் வீதிகளிற் சிதறி ஓடினர். கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்சமடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ்சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதிகரித்திருந்தது. தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் இறந்தவர்களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்காவிற்கு நிதி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூதுவர்கள் தமது கவலையினை வெளியிட்டுள்ளனர்.

www.tamilarangam.net

***இதில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு :***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | முருகேசு சண்முகரத்தினம் | 56 |
| 02. | சண்முகரத்தினம் சசி | 20 |
| 03. | சண்முகரத்தினம் கிரிசாந் | 18 |
| 04. | முருகேசு மார்க்கண்டு | 62 |
| 05. | இரத்தினம் சரஸ்வதி | -- |

## 27. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை – 18 நவெம்பர் 2006

வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 2006 நவம்பர் 18ஆம் நாள் காலை 9.45 மணியளவில் தமது கல்லூரி வளாகத்தினுள் உள்ள புல்லுகளைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை அங்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மாணவர்களை சமீபமாக வருமாறு அழைத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். உடன் மாணவர்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்தவுடன் இராணுவத்தினர் அச்சுதன் என்ற மாணவனை எழுந்து வரும்படி அழைத்தனர். அவர் எழுந்து அவர்கள்முன் கைகளை உயர்த்திக்கொண்டு சென்றபோது அவர்மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். அவர் அவ்விடத்திலேயே துடிதுடித்து வீழ்ந்தார்.

மாணவர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள் என்று கத்தியபோதும். அவர்கள் எதனையும் பொருட்படுத்தாது ஈவிரக்கமற்ற முறையில் அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர். இதன்போது 04 மாணவர்கள் கொல்லப்பட்டதுடன் 11 மாணவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு:***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01 | இராமச்சந்திரன் அச்சுதன் | 25 |
| 02 | சித்திரவேலு கோபிநாத் | 22 |
| 03 | நிசாந் முகமட் | 22 |
| 04 | திருநாவுக்கரசு சிந்துஜன் | 21 |

***இச்சம்பவத்தின் போது காயமடைந்தோர் விபரம்:***

| | *பெயர்* | *வயது* | | *பெயர்* | *வயது* |
|---|---|---|---|---|---|
| 01 | கே.விமலினி | 22 | 06 | கே.அம்பிகா | 24 |
| 02 | எஸ்.சிவாஜினி | 23 | 07 | ஆர்.ராஜினி | 23 |
| 03 | ஐ.யுனைட்ற் | -- | 08 | எஸ்.ருசானி | -- |
| 04 | சின்னராசா லோகநாதன் | 28 | 09 | ஆர்.நவ்சார் | -- |
| 05 | மகாதேவன் குமுதினி | 21 | 10 | யூட் | -- |

## 28. *மன்னார் படகுத்துறைப் படுகொலை - 02 ஜனவரி 2007*

www.tamilarangam.net

இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வடகிழக்கே சுமார் 20மைல்களுக்கு அப்பாலுள்ளது படகுத்துறைக் கிராமம். 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்மீது ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ்.நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து 35வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டமையால் இக்கரையோரக்கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று உள்ளது. தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.



2007 ஜனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக இலங்கை வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9.30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த இலங்கை வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும் விமானங்களிலிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததாலும் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன. பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற்பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடூரத்தையே வெளிப் படுத்துகின்றது.

***இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | அ.ஆனந்தி | 32 |
| 02. | அ.விதுசன் | 04 |
| 03. | அ.இராஜகுமாரி | 57 |
| 04. | அ.சத்தியப்பிள்ளை | 26 |
| 05. | அ.குகன் | 36 |
| 06. | கு.தயாழன் | 02 |
| 07. | கு.வலஸ்தீனா | 30 |
| 08. | ப.ஜமேசன் | 12 |
| 09. | ச.மதுசன் | 01 |
| 10. | உ.தயகுமார் | 55 |
| 11. | உ.மாலினி | 27 |
| 12. | உ.தர்சிகா | 01 |
| 13. | வி.வினோயன் | 04 |
| 14. | வி.தர்சினி | 08 |
| 15. | வி.விஜிதா | 35 |

## 29. *மன்னார் கல்வியாளர்கள் படுகொலை – 27 பெப்ரவரி 2007*

www.tamilarangam.net

மன்னார் மாவட்டம் மடு விளாத்திக்குளம் பகுதியில் 2007 பெப்ரவரி 27 முற்பகல் 10.30 மணியளவில் மடு கோட்டக்கல்வி அதிகாரியுடன் விளாத்திக்குளம் பாடசாலை முதல்வராகப் பொறுப்பெடுக்க உந்துருளியில் சென்ற இவர்களை இலக்கு வைத்து சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர்த்தாக்குதலில் பாடசாலை முதல்வர் சம்பவ இடத்திலேயே மரணமானார். மேலும் கோட்டக்கல்வி அதிகாரி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பலனளிக்காது 01.03.2007 அன்று வைத்தியசாலையில் மரணமானார்.

***கொல்லப்பட்டவர்கள்***

| *பெயர்* | *வயது* | *முகவரி* | *தொழில்* |
|---|---|---|---|
| 01. கிறிஸ்ரின் இராஜக்கோன் | 47 | விடத்தல்தீவு | கோட்டக்கல்வி அதிகாரி |
| 02. சிலுவைராசா அமலநேசன் | 33 | விடத்தல்தீவு | முதல்வர் |

## 30. *மட்டு. படுவான்கரைப் படுகொலை – 08,09.மார்ச் 2007*

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான், வாழைச்சேனை, மயிலம்பாவெளி மற்றும் மட்டக்களப்பு ஆகிய படைமுகாம்களில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த படுவான்கரை மக்கள் குடியிருப்புக்கள் மீது 2007 மார்ச் காலப்பகுதியில் கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அவ்வாறான தாக்குதலில் மார்ச் 08ஆம் நாள் காலை 10.30 மணியளவில் படுவான்கரை தாண்டியடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர். அத்துடன் அன்றைய தினம் ஆயித்தியமலை மற்றும் இலுப்படிச்சேனை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எறிகணையில் மேலும் மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இதே போன்று மறுநாள் மார்ச் 09ஆம் நாள் படுவான்கரை மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவிச்சில் கொல்லப்பட்டதுடன் பன்னிரண்டுவயதுச் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் காயமடைந்தனர். இவ்விரண்டு நாள் தாக்குதல்களின் போதும் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 07 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர்.

***கொல்லப்பட்டவர்கள்***

| *பெயர்* | *வயது* |
|---|---|
| 01. அ.விஜயலக்சுமி | |
| 02. பே.றஞ்சிதா | |
| 03. பே.சசிக்குமார் | 19 |
| 04. பே.வசந்தகுமார் | 44 |
| 05. தெய்வானை | |

www.tamilarangam.net

## 31.மட்டு. சித்தாண்டிப் படுகொலை – 29 மார்ச் 2007

மட்டக்களப்பு நகரத்திலிருந்து வடக்குத் திசையாக 13மைல் தொலைவில் சித்தாண்டிக் கிராமம் அமைந்துள்ளது. இந்து மதத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயம் அமைந்த இக்கிராமம் வளங்கள் நிறைந்ததும் மக்கள் செறிந்து வாழும் ஓர் இடமாகவும் உள்ளது. இங்கு வாழும் மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயம் ஆகும்.

இக்கிராமத்தின் 3ஆம் பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் 29.03.2007 வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் மோட்டார் பீரங்கித்தாக்குதலினை மேற்கொண்டனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் மற்றும் இரண்டு வயதுக் குழந்தைகள் இரண்டு என ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களின் எட்டு வீடுகள் பலத்த சேதங்களிற்கு உள்ளாகியுள்ளன.

***கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* | | |
|---|---|---|---|---|
| 01 | நல்லம் தவமணி | 30 | 05 பேரின்பராசா வசந்தகுமார் | 18 |
| 02 | நல்லம் நிரேஜா | 02 | 06 அழகையா விஜயலக்சுமி | 42 |
| 03 | பேரின்பராசா ரஞ்சிதா | 02 | 07 நாகமணி தம்பித்துரை | 42 |
| 04 | பேரின்பராசா சசிக்குமார் | 15 | 08 இளையதம்பி சின்னத்துரை | 50 |

## 32. மட்டு. செங்கலடிப் படுகொலை – 14 ஏப்ரல் 2007

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரதேச செயலர் பிரிவில் கணபதிப்பிள்ளை எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு 2007ஏப்ரல் 14 தமிழ் சிங்களப் புதுவருட தினத்தன்று வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கொண்டாட்டத்திலிருந்தவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஓர் குழுவினர் துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டனர். இதன்போது 03 வயதுக்குழந்தை, 15வயதுச் சிறுமி ஒருவர் உட்பட 05 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

***கொல்லப்பட்டவர்களில் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | தமிழ்ச்செல்வி | 15 |
| 02. | குழந்தை ஒன்று | 03 |
| 03. | இன்னும் மூன்று பொதுமக்கள் | |

***காயமடைந்தவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | எம்.இரட்ணசிங்கம் | 06 |

## 33. *சிலாவத்துறைப் படுகொலை – 02 செப்ரெம்பர் 2007*

www.tamilarangam.net



2007இல் சிறிலங்கா இராணுவத்தினரின் மன்னார் மீதான வலிந்த தாக்குதலின் விளைவாக சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த 13 குடிமக்களை ஏற்றிக்கொண்டு வான் ஒன்று சிறிலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவம் 2007 செப்ரெம்பர் 02ஆம் நாள் இடம்பெற்றது.

இராணுவத்தின் மத்தியில் ஏற்பட்ட இம்மோதலின்போது கொல்லப்பட்ட பொதுமக்களின் உடலம் இரண்டு நாட்களாக அகற்றப்படவில்லை. பழுதடைந்த உடலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவால் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரு தந்தை, தாய், 04 வயது மகனும் உள்ளடங்குவார்கள்.

இதிலிருந்து மூன்று வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 26ஆம் நாள் வணபிதா நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித் இவ்வாறானதொரு கிளைமோர்த்தாக்குதலில் இதற்கு அருகாமையிலுள்ள இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவர் அப்பொழுது தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தார். இதில் அவரது உதவியாளரும் கொல்லப்பட்டார்.

## 34. *பெரியமடுப் படுகொலை – 25 ஒக்ரோபர் 2007*



மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரியமடு கிராமமும் ஒன்றாகும். இடம் பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித்தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3பேர் கொல்லப்பட்டும் 9பேர் காயமடைந்துமுள்ளனர்.
மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து, 2007 ஒகஸ்ட் 25ஆம் நாள் தொடக்கம் இராணுவத்தின் ெ'ல்வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துவருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25ஆம் நாள் நண்பகல் 12மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ெ'ல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணியான செல்வநாதன் பரிமளா (வயது 19), அவரின் சகோதரி தங்கவேல் கௌசல்யா (வயது 09), இவர்களின் தந்தை சோமசுந்தரம் ஜெயபாலசிங்கம் (வயது 61) ஆகியோர் உடல்சிதறிப் பலியானதுடன் பரிமளா, கௌசல்யா ஆகியோரின் தாயார் ஜெயபாலசிங்கம் திரவியம் (வயது 55) இவரது பேரப்பிள்ளை செல்வநாதன் கோகிலன் (வயது 03), பிரான்சிஸ் சுதர்சன் (வயது 15), கறுப்பையா லோகநாதன் (வயது 45), இவரின் மனைவி சிவபாக்கியவதி (வயது 45), இவர்களின் மகள் உமாதேவி (வயது 13), வசந்தன் றெபேக்கா (வயது 05), சுப்பையா மோகன்ராஜ் (வயது 29), பா.சுப்பிரமணியம் (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்து முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதில் செல்வநாதன் கோகுலன் என்ற மூன்று வயதுக் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணியான பரிமளாவின்

வயிற்றுப்பகுதியை ஷெல்துண்டுகள் வெட்டிச் சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

www.tamilarangam.net

## 35. அம்பாறை றொட்டை செம்மணிக்குளம் படுகொலை – 11 நவெம்பர் 2007

அம்பாறையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான கண்ணகிபுரத்திலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான றொட்டை செம்மணிக்குளம் 2007 நவம்பர் 11ஆம் நாள் மாலை 5மணியளவில் நோக்கி உழவியந்திரத்தில் சென்ற மூன்று பொதுமக்களை சிறிலங்கா அதிரடிப்படையினர் கடத்திச் சென்ற பின் சுட்டுக்கொலை செய்தள்ளனர். மறுநாள் பொத்துவில் மருத்துவ மனையில் மூன்று விடுதலைப்புலிகளின் உடல்கள் எனக் கூறி ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

***இதன் போது கொல்லப்பட்டவர்கள்***

01. சாமித்தம்பி செல்வராசா
02. எஸ்.குணரத்தினம்
03. க.சுதாகரன்

## 36. கிளிநொச்சி தருமபுரம் படுகொலை – 25 நவம்பர் 2007



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் கிராம மக்கள் விவசாயத்தினையே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். சுமாராக கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள தருமபுரம் மக்கள் குடியிருப்புக்கள் மீது கடந்த 25ஆம் நாள் காலை 7.15 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் எட்டுக்கும் அதிகமான குண்டுகளை வீசின. இவ்வாறு வீசப்பட்ட குண்டுகள் மக்களின் குடியிருப்புக்கள் மீதும் அதனை அண்டிய பகுதிகள் மீதும் வீழ்ந்துவெடித்தன.

இதன்போது மூன்று வீடுகள் முற்றாக அழிவடைந்ததுடன் ஏழு வீடுகளும் சேதங்களிற்கு உள்ளாகின. அத்துடன் பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.
இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தருமபுரம் எட்டாம் யுனிற் பகுதியில் வசித்துவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வர்ணலிங்கம் குடும்பத்தில் மூவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். மேலும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் இச்சம்பவத்தில் வர்ணலிங்கத்தின் மகன் கமல்ராஜ் என்பவரின் மனைவி தனயோகம் கால், கையை இழந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது 03.12.2007 இல் மரணமானார்.

இத்தாக்குதல் காரணமாக மக்களின் பயன்தரு மரங்கள், பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் என்பன அழிவடைந்துள்ளன. மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதியை இலக்கு வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டதால் தருமபுரம் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுகின்றது. மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

www.tamilarangam.net

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரம்***



| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | ஆறுமுகம் வர்ணலிங்கம் | 54 |
| 02. | வர்ணலிங்கம் சரஸ்வதி | 49 |
| 03. | வர்ணலிங்கம் சுமிதாநந்தினி | 25 |
| 04. | முருகையா லுபாசினி | 15 |
| 05. | கமல்ராஜ் தனயோகம் | 19 |

***இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | வர்ணலிங்கம் கமல்ராஜ் | 28 |
| 02. | மு.நடனதேவி | 41 |
| 03. | அ.வேல்முருகு | 60 |
| 04. | லிங்கேஸ்வரன் | 60 |
| 05. | த.அனுசியா | 04 |
| 06. | மேலும் ஒருவர் | |

## 37. *முல்லை.ஐயன்கன்குளம் படுகொலை – 27 நவம்பர் 2007*







முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விவசாயக் கிராமங்களில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களில் ஐயன்கன்குளம் கிராமமும் ஒன்றாகும். இக்கிரமத்தில் சிறார்களின் கல்வியில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுவரும் ஒரே ஒரு பாடசாலையான மு.ஃ.ஐயன்கன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தரம் 11 வரையான மாணவர்களுக்கே கல்வி கற்பித்து வருகின்றது.

மருத்துவ வசதிகள் அற்ற இக்கிராமத்தில் நிலையை உணர்ந்த இப்பாடசாலை மாணவர்கள் அருகிலுள்ள ஆலங்குளம் மருத்துவமனையின் மருத்துவர்களுக்கு உதவுவதும் முதலுதவி தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதும் வழமையானதே. அவ்வாறே 2007 நவம்பர் 27ஆம் நாளும் முற்பகல் 11மணியளவில் பாடசாலையிலிருந்து ஆலங்குளம் மருத்துவமனைக்கு நோயாளர் காவுவண்டியில் சென்ற இவர்கள் சுமார் 150 மீற்றர் தூரம் சென்று கொண்டிருக்கும் போது சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 06 மாணவர்களும் சுகாதாரத்தொண்டர்கள் இருவர், சாரதி என 09 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இரு மாணவிகள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களது உடலையும் படுகாயமடைந்தவர்களையும் அப்பகுதி மக்கள் உடனடியாக உழவு இயந்திரம் மூலம் மல்லாவி பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தனர். இத்தாக்குதல் காரணமாக சில நாட்கள் வன்னி முழுவதும் சோகம் தழுவியதாகவே காணப்பட்டது.

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது பெயர் விபரங்கள்***

www.tamilarangam.net

| *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|
| 01. நாகரட்ணம் மதிகரன் | 15 | மாணவன் |
| 02. நாகரட்ணம் பிரதீபா | 16 | மாணவி |
| 03. நித்தியானந்தம் நிதர்சனா | 13 | மாணவி |
| 04. சந்திரசேகரம் டிறோசா | 17 | மாணவி |
| 05. கருணாகரன் கௌசிகா | 15 | மாணவி |
| 06. சண்முகவேல் சகுந்தலாதேவி | 17 | மாணவி |
| 07. அற்புதராசா அஜித்நாத் | 22 | சுகாதாரத் தொண்டர் |
| 08. வைரமுத்து கிருஸ்ணவேணி | 25 | சுகாதாரத் தொண்டர் |
| 09. காந்தன் | | சாரதி |

***இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களது பெயர் விபரங்கள்***

| *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|
| 01. சந்திரசேகரம் யசிதா | 15 | மாணவி |
| 02. தேவராசா உதயராணி | 16 | மாணவி |

## 38. *புலிகளின் குரல் வானொலி நிலையம் மீதான விமானத் தாக்குதல்*

***27 நவம்பர் 2007***



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் ஏ-09 நெடுஞ்சாலை வீதிவழியே உள்ள 155ஆம் கட்டைப் பகுதியிலுள்ள புலிகளின்குரல் வானொலிநிலையம் மற்றும் அதனை அண்டிய பொதுமக்களின் குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள், பொது நூலகம் என்பனவற்றின் மீது கடந்த 27.11.2007 அன்று மாலை 4.30மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் மற்றும் மிக் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் மூன்று புலிகளின் குரல் நிறுவனப் பணியாளர்கள், அயலவர்கள் மற்றும் வீதியால் பயணித்தவர்கள் என 10பேர் கொல்லப்பட்டனர். மேலும் 10பேர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலைக் கண்டித்து ருநேளுஊழு அமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மகேஸ்வரனின் தாயார் சீதாலட்சுமியின் கருத்து எனக்கு ஒரே ஒரு ஆண்பிள்ளை இவன் தான். மாவீரர் தினத்திற்கு கிளிநொச்சித் துயிலுமில்லத்திற்குப் போகவேண்டுமென்று முதல் நாளே முறிகண்டியிலுள்ள எனது தங்கையின் வீட்டிற்குச் சென்றவன். என்னுடைய பிள்ளை துயிலுமில்லம் போகும்போது தான் இது நடந்தது. இவன் தானே எனக்குக் கொள்ளி போடுகிற பிள்ளை. எனக்கு முன்னர் அவனை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத அளவிற்கு ஆக்கிவிட்டார்கள். என்னுடைய கணவரும் இந்திய இராணுவத்தினர் செய்த சித்திரவதைகளைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்தவர் என்றார்.

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது பெயர் விபரங்கள்***

| *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|
| 01. முரளிதரன் சிந்துஜன் | 11 | மாணவன் |
| 02. கறுப்பையா பிரியதர்சனன் | 20 | மாணவன் |
| 03. தியாகராசா மகேஸ்வரன் | 27 | விவசாயம் |
| 04. செல்வராஜா சிவகுமாரன் | 46 | வர்த்தகர் |
| 05. கணேசமூர்த்தி சுபாஜினி | 36 | புலிகளின்குரல் வானொலி நிலைய அறிவிப்பாளர் |
| 06. மகாலிங்கம் சுரேஸ்லின்பியோ | 36 | புலிகளின்குரல் வானொலி நிலையப்பணியாளர் |
| 07. தருமலிங்கம் தவமணிதேவி | 62 | வயோதிபர் |

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| 08. | கிருஸ்பிள்ளை தருமலிங்கம் | | புலிகளின் குரல் வானொலி நிலையத்தின் சாரதி |
| 09. | ஆனந்தராசா தெய்வநாயகி | 55 | வீட்டுப்பணி |
| 10. | இராசலிங்கம் பிரதீபன் | 21 | |

***இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களது பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* | | | |
|---|---|---|---|---|---|
| 01. | பவநிதி | 24 | 06. | ஸ்ரெலா | 35 |
| 02. | குணசீலி | 29 | 07. | சாந்தபோதினி | |
| 03. | நிர்மலாதேவி | 54 | 08. | ஜனனி | 33 |
| 04. | கவிதா | 29 | 09. | ஜி.மனோஜ் | 04 |
| 05. | தினேஸ்குமார் | 21 | 10. | சி.பவிதா | 06 |

## 39. *மன்னார் மடுப் படுகொலை* – ௨௯ ஜனவரி ௨008



மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலர் பிரிவில் மடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரைத் தலமாகவும் விளங்குகின்ற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகின்றது. இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்களாக, மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்களாவர்.

2007 நவம்பர் 13ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு, கூராய், கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்குச் சென்ற பின்னர் அங்கு 50 குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தீவிரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள் 5கிலோமீற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த மன்.'.சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேரூந்திலேயே சென்று வருவார்கள். இங்கு பாடசாலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக்குத் தனியாக என பேரூந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேரூந்திலேயே பயணிப்பார்கள்.

www.tamilarangam.net

அவ்வாறே 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் நாளும் வழமைபோல் பேரூந்தில் சென்ற சிறுவர்கள் பிற்பகல் பாடசாலை முடிந்ததும் இலுப்பக்கடவையிலிருந்து மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதே பேரூந்தில் ஆனந்தமாக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர், பேரூந்து மடுவை அண்மித்ததும், சரியாக 2.30 மணியளவில் சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் இப்பேரூந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 09 பாடசாலை சிறார்கள் 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவியாளர், 01 பேரூந்தின் ஓட்டுநர், 01 பேருந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுநர் என 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங்கலாக 21பேர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலுள்ள இராணுவத்தினர் அப்பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப்பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் அங்கிருந்து உடனடியாக முழங்காவில் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர்களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஜெனிஸ்ரன் பீரிஸ் என்ற சிறுவன் பெப்ரவரி 03ஆம் நாள் உயிரிழந்தார். மேலும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பாடசாலை அதிபர் பெப்ரவரி 05ஆம் நாள் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது.

***இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|---|
| 01. | அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் புறுனோ கொண்ஸ்ரன்ரயின் | 13 | மாணவன் |
| 02. | அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் பிறிற்றோ கொண்ஸ்ரன்ரயின் | 15 | மாணவன் |
| 03. | செல்வசிங்கம் யூட்கொஸ்ரன் | 15 | மாணவன் |
| 04. | செல்வசிங்கம் யூட்கொலிண்டன் | 12 | மாணவன் |
| 05. | ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி | 15 | மாணவி |
| 06. | சூசையப்பு சாம்சன் சொய்சா | 13 | மாணவன் |
| 07. | சந்தான் பெனாட் றோஜ் | 16 | மாணவன் |
| 08. | அந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன் பீரிஸ் | 12 | மாணவன் |
| 09. | பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ | 11 | மாணவன் |
| 10. | பத்பராசா பேனாட் ஜெனார்த்தனன் | 12 | மாணவன் |
| 11. | இமானுவேல் குணசிங்கம் அன்ரன் டெஸ்மன் | 16 | மாணவன் |
| 12. | ஞானப்பிரகாசம் ஜோன் மில்டன் | 16 | மாணவன் |
| 13. | அன்ரனி சதீசன் | 11 | மாணவன் |
| 14. | செபமாலை மேரியோசப்பின் | 31 | ஆசிரியர் |
| 15. | ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி | 37 | பாசாலை ஊழியர் |
| 16. | கிருபைபராசா ஜெராட் ஞானகரன் | 29 | ஓட்டுநர் (பேரூந்து) |
| 17. | சூசையப்பு லெம்பேட் ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட் | 23 | நடத்துநர் |
| 18. | க. சண்முகசுந்தரம் | 61 | ஓட்டுநர் |
| 19. | திருமதி. லெம்பேட் | 51 | அதிபர் |
| 20. | விமலநாதன் நீத்தம்மா | 33 | தாதி |

*இச்சம்பவத்தில காயமடைந்தவர்களின் பெயர் விபரம்*
www.tamilarangam.net

| | *பெயர்* | *வயது* | *தொழில்* |
|---|---|---|---|
| 01 | கிருசாந்த் | 08 | மாணவன் |
| 02 | ற.பியுலின் | 09 | மாணவன் |
| 03 | ஜெனோஸஸ்டிகா | 12 | மாணவி |
| 04 | தர்சனா | 13 | மாணவி |
| 05 | டியுலஸ் | 15 | மாணவன் |
| 06 | ரஞ்சன் ராஜசூரியர் யுடக்சியா றூப்ளின் | 11 | மாணவி |
| 07 | பிரான்சிஸ் சேவியர் மதுசாலினி | 16 | மாணவி |
| 08 | அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் மேரிகொண்சீற்றா | 16 | மாணவி |
| 09 | அனித்தா | 16 | மாணவி |
| 10 | ற.தனுசிகா | 16 | மாணவி |
| 11 | ரெசிற்றா | 38 | ஆசிரியர் |
| 12 | துசிதா | 35 | ஆசிரியர் |
| 13 | நிர்மலா றஞ்சினி | 36 | ஆசிரியர் |
| 14 | குணசீலி | 45 | ஆசிரியர் |
| 15 | ஞானசூரியர் | 35 | அஞ்சல் ஊழியர் |
| 16 | ஞானசூரியர் ஜசிந்தா | 34 | வீட்டுப்பணி |
| 17 | அந்தோனி பீரிஸ் ோபனா பீரிஸ் | 22 | வீட்டுப்பணி |
| 18 | பாக்கியநாதன் | 60 | |
| 19 | இன்னுமொருவர் | | |

## 40. *கிளிநொச்சி பூநகரி கிராஞ்சியிப் படுகொலை – ௨௨ பெப்ரவரி ௨00௮*

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும்



கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது கடந்த 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறிலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவர்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் என எட்டுப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07பேர் உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மறுநாள் பூமணி என்ற வயோதிபர் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

இச்சம்பவத்தில் பொதுமக்களின் மூன்று வீடுகள் முற்றாகவே அழிவடைந்ததுடன் பல வீடுகள் பலத்த சேதங்களிற்கு உள்ளாகியுள்ளது. மக்களின் பயன்தரு மரங்களும், தென்னைமரங்களும் பெருமளவில் அழிவடைந்துள்ளன.

***இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* | | *பெயர்* | *வயது* |
|---|---|---|---|---|---|
| 01. | சசிகரன் கௌரிநாயகி | 34 | 06. | விஜயகுமார் விதுஜா | 21 |
| 02. | சசிகரன் தமிழ்வேந்தன் | 06மாதம் | 07. | இந்திரன் லலிதா | - |
| 03. | சசிகரன் கஜீவன் | 04 | 08. | சுதாகரன் சுமதி | 30 |
| 04. | கதிரவேலு திருநீலகண்டன் | 79 | 09. | தர்மலிங்கம் பூமணி | 68 |
| 05. | கிருஸ்ணசாமி சிவாநந்தி | 27 | | | |

www.tamilarangam.net

***இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்***

| *பெயர்* | *வயது* | *பெயர்* | *வயது* |
|---|---|---|---|
| 01. சசிகரன் கருணயன் | 08 | 07. விஜயகுமார் டினோசன் | 21 |
| 02. சிறிபதி இராஜேஸ்வரி | 33 | 08. அருளானந்தம் லீலாவதி | 68 |
| 03. சத்தியநாதன் தெய்வநாயகி | 43 | 09. அருளானந்தம் சத்தியவரதன் | 43 |
| 04. சதாசிவம் கமலாதேவி | 60 | 10. சுதாகரன் சபீனா | 05 |
| 05. சுதாகரன் பாணுசன் | 06 | 11. விஜயகுமார் கினோசன் | 02 |
| 06. விஜயகுமார் சிவாநந்தினி | 36 | | |

## 41.*திருமுறிகண்டி – அக்கராயன் வீதியில் கிளைமோர்த்தாக்குதல்*

### 23 மே 2008



கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் பிற்பகல் 2மணியளவில் அவர்களின் வாகனம் மீது சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர். இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05பேர் உட்பட 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

**இது தொடர்பாக பாரதிபுரம், மலையாளபுரம் கிராமசேவகர், அருட்பிரகாசம் சிம்சன்போல்**

23.05.2008 அன்றையதினம் அக்கராயன் வீதி திருமுறிகண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த 12 பொதுமக்களும் பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 04 பொதுமக்களுமாக 16பேர் கொல்லப்பட்டும் மேலும் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்

01. அழகன் சுப்பிரமணியமும் அவரது துணைவியார் சரஸ்வதியும் இறந்துள்ள நிலையில் இவர்களுக்கு 06 பிள்ளைகள் உள்ளனர். இவர்களின் மூத்த மகளிற்கு 14 வயது கடைசி மகனுக்கு ஒன்றரை வயது.

02. அதே போன்று சாமிக்கண்ணு கறுப்பையா என்பவரும் அவரது மனைவியும் இறந்துள்ளார்கள் இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் மூத்த பிள்ளைக்கு 12 வயது தான்.

03. அதே போன்று பெரியசாமி விஜயரட்ணம் என்பவரின் குடும்பத்தில் விஜயரட்ணமும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுமாக 05பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் இவரது மூத்த பிள்ளையும் கடைசிப்பிள்ளையும் மாத்திரமே உயிர் தப்பியுள்ளார்கள்.

04. இதை விட கணவனால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்த செல்வராசா கலாதேவி என்பவருக்கு 05 பிள்ளைகள்

05. மற்றும் பன்னீர்ச்செல்வம் அழகுராணி என்பவருக்கு 04 பிள்ளைகள்

www.tamilarangam.net

இவ்வாறான நிலையில் இவர்களது பிள்ளைகள் பெற்றோர்களின்றி எவ்வாறு தொடர்ந்தும் வாழப்போகின்றார்கள் என்பது கேள்விக்குறியே. இவர்களுக்கான ஆதரவினை யார் வழங்குவார்கள்? அவ்வாறு வழங்கினாலும் இச்சிறார்களின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக்குறியதே.

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | பெரியசாமி விஜயரட்ணம் | 40 |
| 02. | விஜயரட்ணம் லோகநந்தா | 39 |
| 03. | விஜயரட்ணம் சிவகலா | 16 |
| 04. | விஜயரட்ணம் தனு | 09 |
| 05. | விஜயரட்ணம் விது'ன் | 07 |
| 06. | பன்னீர்ச்செல்வம் அழகுராணி | 42 |
| 07. | கணேசன் தனராஜ் | 34 |
| 08. | சந்திரசேகரன் கீர்த்திகா | 10 |
| 09. | சாமிக்கண்ணு கறுப்பையா | 40 |
| 10. | கறுப்பையா அன்னலட்சுமி | 40 |
| 11. | அழகன் சுப்பிரமணியம் | 40 |
| 12. | சுப்பிரமணியம் சரஸ்வதி | 40 |
| 13. | செல்வராசா கலாதேவி | 34 |
| 14. | சுப்பிரமணியம் தனலட்சுமி | 54 |
| 15. | சந்திரசேகரம் கார்த்திகா | 10 |
| 16. | இராஜேந்திரம் கலாவள்ளி | 29 |

***இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள்***

01 விஜயரட்ணம் கார்த்திக்
02 சோபிகா

## 42. புதூர் நாகதம்பிரான் ஆலயம்சென்று வீடு திரும்பிய அடியவர்கள் மீது கிளைமோர்த் தாக்குதல் – 02 யூன் 2008




முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களின் ஆலயங்களில் ஒன்றான புதூர்நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்திற்காக வருடந்தோறும் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து பெருமளவான மக்கள் ஆலயத்திற்குச் சென்று தமது நேர்த்திக் கடன்களை பல ஆண்டுகளுக்கும் மேலாக நிவர்த்தி செய்து வருகின்றனர். எனினும் அண்மைக்காலமாக வன்னிப் பகுதிகளில் இடம்பெறும் கிளை மோர்த்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் காரணமாக ஆலய விழாக்கள், பொதுநிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கைகள் பெருமளவில் குறைந்துள்ளன.

அந்தவகையில் 2008 யூன் இரண்டாம் நாள் புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்களின் எண்ணிக்கை வழமையை விடக்குறைவாகவே இருந்தது. அங்கு வருகை தந்தவர்கள் நீண்ட பயணங்களை மேற்கொண்டே வருகைதந்தனர்.

அதில் குறிப்பாக முல்லைத்தீவு அம்பலவண்பொக்கணையைச் சேர்ந்த நால்வரும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் என 06 பேருமாக மொத்தம் 10 பொதுமக்கள் கார் ஒன்றில் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியூடாக ஆலயத்திற்குச் சென்று தமது வழிபாட்டினை முடித்துவிட்டு தமது வீடு நோக்கி அதே பாதையால் சென்று கொண்டிருந்த வேளை இரவு 8மணியளவில் கார் மாங்குளத்திலிருந்து சுமார் 08கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் தாக்குதலுக்காக காத்திருந்த சிறிலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் தந்தை மற்றும் மகன் அடங்கலாக 06 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

மேலும் ஏனையோர்கள் படுகாயமடைந்த நிலையில் நீண்ட நேரத்தின் பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்***

| *பெயர்* | *வயது* |
|---|---|
| 01. கணபதிப்பிள்ளை முருகதாஸ் | 36 |
| 02. முருகதாஸ் நிலவன் | 04 |
| 03. காத்தப்பிள்ளை நாகராசா | 57 |
| 04. ஐயாத்துரை வசந்தகுமார் | 28 |
| 05. தர்மலிங்கம் யோகேஸ்வரி | 42 |
| 06. கணேசலிங்கம் கனிஷ்ரா | 09 |

***காயமடைந்தவர்கள்***

| *பெயர்* | *வயது* |
|---|---|
| 01. வசந்தகுமார் சித்திரா | 26 |
| 02. வசந்தகுமார் சுஜிந்தன் | ஒன்றரை |
| 03. முருகதாஸ் சாளினி | 12 |
| 04. தர்மலிங்கம் வினோதினி | 17 |

## 43. புதுக்குடியிருப் படுகொலை – 15 யூன் 2008



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரம் வேணாவில் நேசன் குடியிருப்பு மீது சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் கடந்த 15ஆம் நாள் காலை 9.50 மணியளவில் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன. இதன் போது 04 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். அத்துடன் நிறைமாதக் கர்ப்பிணி உட்பட 10 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். அத்துடன் இராசலிங்கம் அன்னலட்சுமி, இராமசாமி பத்மநாதன், ஜெயவீரசிங்கம் ஜெயலட்சுமி, பெருமாள் முருகையா, வேலாயுதம் இராஜகோபால், ஐயாத்துரை சுந்தரலிங்கம், சோ.செந்தூர்முருகன் ஆகிய 07 பொதுமக்களினது வீடுகள் முற்றாக அழிவடைந்ததுடன் மேலும் 25 வரையான வீடுகள் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் இடம்பெற்ற பகுதியிலிருந்து சுமார் 500மீற்றர் சுற்றளவினுள் பொதுச்சந்தை, நகரப் பாடசாலைகள், நகர வர்த்தக நிலையங்கள், தொழில் ஸ்தாபனங்கள், வைத்தியசாலை மற்றும் முல்லை வலயக்கல்வி அலுவலகம் என்பன அமைந்துள்ளன.

இதன்போது புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, மத்தியகல்லூரி கேட்போர் கூடம், முல்லை வலயக்கல்வி அலுவலகம், ஸ்ரீ.கந்தசாமி முருகன் ஆலயம் ஆகிய பொதுக்கட்டடங்களும் சேதங்களிற்குள்ளாகின.

இச்சம்பவம் தொடர்பாக காயமடைந்த ரெங்கசாமி தங்கராஜாசொந்த இடம் நெடுங்கேணி மாமடு. செல்லடி காரணமாக கடந்த 12ஆம் நாள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு 1ஆம் வட்டாரத்தில் வந்து இருந்தோம். அப்போது தான் இச்சம்பவம் நடந்தது. காலை நாங்கள் வீட்டில் தான் நின்றோம். வீட்டில் நின்று பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டு நின்றனான். அப்பொழுது கிபிர் குண்டு போட்ட சத்தம் கேட்டது. உடனே பதுங்கு குழிக்குள் ஓடினோம். எனக்கு 06 பிள்ளைகள். பிள்ளைகளை பதுங்கு குழிக்குள் இறக்கி விட்டு நான் குதிப்பதற்கிடையில் இரண்டாவது குண்டும் அடித்துவிட்டான். அதில் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. கத்தினேன். மனைவி பிள்ளைகள் என்னைத்தூக்கிக் கொண்டு பதுங்கு குழிக்குள் சென்றார்கள். நீண்ட நேரங்களின் பின்னரே

www.tamilarangam.net

அயலவர் ஒருவரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். நான் நாளாந்தம் கூலிவேலை செய்துதான் குடும்பத்தைக் காப்பாற்றுகின்றேன். ஊரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு இன்னமும் தொழிலின்றி பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலேயே இத்தாக்குதல் நடைபெற்றதினால். எனது குடும்பம் பெரியளவில் கஸ்டப்படுவார்கள். நான் குணமாகி வரும்வரை அவர்கள் என்னதான் செய்வார்கள் என்று தெரியவில்லையே. எல்லாம் சின்னப்பிள்ளைகள். கடைசி 07 மாதக் கைக்குழந்தை. எனக்கு பிள்ளைகளை நினைத்துப் பார்க்கும் போது தலை விறைக்கின்றது. (கருத்து தெரிவிப்பு - 16.06.2008)

***இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்***

| | *பெயர்* | *வயது* |
|---|---|---|
| 01. | தவராசா பாணுசன் | 19 |
| 02. | சுப்பிரமணியம் சுகந்தன் | 19 |
| 03. | வேலு நாகதம்பிராசா | 20 |
| 04. | ஐயாத்துரை சுந்தரலிங்கம் | 47 |